பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 26 வியாழக்கிழமை 11.01.2024 கதிர் 426

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு

## திருத்தங்கள் செய்யப்பட்ட நிலையில்

பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நேற்று நீதி அமைச்சர் விஜேதாசராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் இச் சட்டத்தினை சமர்ப்பித்து உரையாற்றியநீதியமைச்சர்விஜேதாச தெரிவித்ததாவது:

பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டமூலத்தை நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்த கால அவகாசம் வழுங்கப்பட்டு, அதன் மீதான இரண்டாம் வாசிப்பு விவாதம் முன்னெடுக்கப்படவுள்ளது.

தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள சட்டமூலத்தில், ☞2

## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழு நேற்று பெருந் தலைவர் சம்பந்தன் வீட்டில் கூடியது. பலத்த வாதப் பிரதிவாதங்களுக்குப் பின்னர் தலைமைப்பதவிக்கானபோட்டியைக் கைவிடுவதுதொடர்பில்வேட்பாளர்கள் கூடிப்பேசுவதற்குஒருநாள்அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இன்றுமீண்டும் கூடி அது தொடர்பில் ஆராய்வது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய கூட்டம் கொழும்பில் உள்ள இரா.சம்பந்தனின் இல்லத்தில் பிற்பகல்மூன்றுமணிமுதல்ஆறரை மணி வரையில் நடைபெற்றது. இந்தக்கூட்டத்தில்தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை.சேனரிராசா உட்பட கட்சியின் அரசியல் குழு அங்கத்தவர்கள் பங்கேற்றனர்.

கூட்டத்தில் உரையாற்றிய ☞2

## இன்று முதல் மழை குறைவடையலாம்

வடக்கு, கிழக்கு, வடமத்திய, ஊவா மாகாணங்களில் நிலவும் மழையுடனான வானிலை இன்று முதல் குறைவடையக்கூடுமென எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

திணைக்களம் விடுத்துள்ள அறிவிப்பில், கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் இடைக்கிடையே மழை பெய்யும். மாலை வேளைகளில் ☞2

## வடக்கு கிழக்கின் வளங்களை அழித்துவிட்டு இன்று அபிவிருத்தி பேசுவது தேர்தலுக்காகவே

### ஜனாதிபதியின் வடக்கு பயணம் குறித்து சுரேஸ் காட்டம்

நாட்டின் அந்நியச் செலாவணியை சேமிப்பதற்கும்விவசாயத்தைத் தொழிற்சாலையாகமாற்றுவதற்கும் உழைத்த வடக்கு-கிழக்கின்பொருளாதார வளங்களை அழித்துவிட்டுஅதற்காக ஒரு வருத்தம்கூட தெரிவிக்காதவர்கள் இன்று வடக்கின் பொருளாதார அபிவிருத்தி குறித்து பேசுவது தேர்தல்பிரச்சாரத்திற்காக மட்டுமே.

தென்னிலங்கை அரசியல் சக்திகளிடம் இனங்களையும்ஐக்கியப்படுத்தி நாட்டுப்பற்றுடன் செயற்படும் எந்தத் திட்டமும் இல்லை என்பதுடன் நாட்டு மக்களைப்பிளவுபடுத்தி தமக்கான வாக்கைப் பெற்றுக்கொள்வதை மட்டுமே நோக்கமாகக் கொண்டுள்ளன என்பதும்ஜனாதிபதியின் அண்மையவடமாகாண வருகைநிரூபித்துள்ளது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் இணைத் தலைவரும் பேச்சாளருமான சுரேஸ் பிரேமச்சந்திரன். ஜனாதிபதி ரணிலின் வடமாகாண வருகை தொடர்பில் கருத்து தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது இரண்டாவது ஆண்டின்தொடக்கத்தில் வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தியை நோக்கமாகக்கொண்டு, மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டங்களை நடத்துவதற் ☞2

## 5 உள்ளூராட்சி மன்றங்களினது இணையத் தளங்கள் அறிமுகம்

### வடக்கு ஆளுநர் அங்குரார்ப்பணம் செய்தார்



யாழ்ப்பாணத்திலுள்ளஐந்துஉள்ளூராட்சி மன்றங்களின் உத்தியோகபூர்வ இணைய தளங்கள் வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸினால் நேற்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

மாகாண ஆளுநர் செயலகத்தின் கேட்போர்கூடத்தில்நடை ☞2

## மட்டக்களப்பில் வெள்ளத்தால் 24 ஆயிரம் பேர் முகாம்களில்

மட்டக்களப்பு மாவட்டத்தின் 4 பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மக்கள் முகாம்களில் தங்கியுள்ளனர் என்று இடர் முகாமைத்துவப்பிரிவுதெரிவித்துள்ளது.

இடர்முகாமைத்துவப் பிரிவு விடுத்துள்ள அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கிரான் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் ஏற்பட்டவெள்ளம்காரணமாக பறங்கியாமடு மற்றும் பாலையடித்தோணா பகுதி மக்கள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பாலையடித்தோணா பிரதேசத்தில் ☞2

## மரக்கறிகளின் விலை கிழக்கில் உச்சத்தில்

(வி.ரி.சகாதேவராஜா)

கனமழை மற்றும் வெள்ளத்தை அடுத்து கிழக்கில் மரக்கறிகளின் விலை உச்சத்தை அடைந்திருக்கிறது.

கரட், பீட்ரூட் போன்ற மலைநாட்டு மரக்கறிகளினா விலை கிலோ ஒன்று 1100 ☞8

## 2023 கொடுப்பனவுகள் சகலதையும் முழுமையாகச் செலுத்த நடவடிக்கை

### நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

2023ஆம் ஆண்டு டிசம்பர் 15 வரையான வரையறுக்கப்பட்ட ஒதுக்கீட்டின் கீழ் முன்வைக்கப்பட்ட சகல பட்டியல்களையும்முழுமையாகச் செலுத்துதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக நிதிஇராஜாங்கஅமைச்சர் ரஞ்சித்சியாம்பலாபிட்டிய தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் நாடாளுமன்ற உறுப்பினர் கபில அத்துகோரல சபை ஒத்திவைக்கும் விவாதத்தில் கலந்து கொண்டு,உரையாற்றும் போது எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டாவாறு தெரிவித்தார்.

அப்பதிலில் அவர் மேலும் ☞10

## இந்திய துணைத் தூதர் ராகேஷ் வடக்கு ஆளுநருடன் சந்திப்பு



யாழ்ப்பாணத்திற்கான இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன் ☞2

### செங்கடலுக்கு அனுப்ப முன்னர்

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உதவக் கடற்படையை அனுப்புங்கள்

### ரவூப் ஹக்கீம் நாடாளுமன்றில் வலியுறுத்து

இஸ்ரேலியர்களுக்கு ஆதரவாக செங்கடலுக்கு எமது கடற்படையினரை அனுப்புவதற்கு முன்னதாக உள்நாட்டில்வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காககடற்படையினரை உடனடியாக அனுப்ப வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும், மு.கா.தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சபை ☞8

## 90 கிலோ கஞ்சா சிக்கியது



யாழ்ப்பாணம் - உரும்பிராய் பகுதியில் 90 கிலோ கேரள கஞ்சா நேற்றுக் கைப்பற்றப்பட்டுள்ளது. இதனைவைத்திருந்தார் என்ற சந்தேகத்தில் இளைஞரொருவர் ☞8

## வரி ஏய்ப்பு செய்யும் நிறுவனங்கள் இனிமேல் சட்டத்தின் தீவிர பிடியில்

உள்நாட்டுஇறைவரி திணைக்களத்தில் பதிவு செய்யாமல், போலிப் பற்றுச் சீட்டுக்களைப் பயன்படுத்தி, இலாபம் ஈட்டும் வர்த்தக மாபியாக்களை முற்றாக நிறுத்துவதற்கு சட்டங்கள் கடுமையாக அமுல்படுத்தப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

எதிர்காலத்தில் ☞2

## மருத்துவ ஒன்றிணைந்த சேவை ஊழியர்கள் பணிப் புறக்கணிப்பு

### நேற்று தொடங்கியது; இன்றும் தொடரும்

மருத்துவசேவைகள் ஒன்றிணைந்த முன்னணியினர் நேற்றுக் காலை 8 மணி முதல் 48 மணித்தியால அடையாளப் பணிப் பகிஷ்கரிப்பினைத் தொடக்கியுள்ளனர்.

நீதியான பொருளாதார கொள்கைக்கு எதிரான அரசாங்கத்தின் அநீதியான ☞8

## இனி இது .....

பெருந் தலைவர் இரா.சம்பந்தன் திருகோணமலை மாவட்டத்தில் தனது ஆதரவாளர்கள் கிளைக் குழுக்களின் தெரிவில் புறக்கணிக்கப்பட்டது தொடர்பில் தனதுகருத்துநிலைப்பாட்டைஎடுத்து வைத்தார். இதுவரையில் அவரது மகனே இந்த விடயங்களில் அதிகப் பிரசங்கித்தனமாகநடந்துகொள்கிறார் என்ற வகையிலான கருத்துக்கள் இருந்து வந்தன. ஆனால், நேற்று அவை எல்லாம் சம்பந்தரின் நேரடியானகருத்துக்களேஎன்பதை அவர் நிரூபித்தார்.

திருகோணமலையில் இடம்பெற்றுள்ளமைபோன்ற பிரச்சினைகளுக்குத்தீர்வுகாணாமல் கட்சியின் பொதுச் சபையைக் கூட்டுவதில்பயனில்லைஎன்றுஅவர் வாதிட்டார். இதுதொடர்பில்அவருக்கு விளக்கங்கள் வழங்கப்பட்டதுடன் அதன் சரி பிழைகள் தொடர்பிலும் கடுமையான வாக்குவாதம் இடம்பெற்றுள்ளது. இறுதியில் திருகோணமலையில் உள்ள கட்சியின் மூலக் கிளைகளின் மூலம் மத்திய குழுவிற்குத் தெரிவாகின்றவர்களில்6இடங்களை பெருந் தலைவர் சம்பந்தனின் ஆதரவாளர்களான அவர் குறித்துரைக்கும் பேர்வழிகளுக்கு வழங்குவதற்குஅரசியல்குழுவினர் இணக்கம் கண்டனர்.

சம்பந்தன் தனது உரையில் கட்சியின் பாரம்பரியப்படி தலைவர் பதவி உட்பட நிர்வாகிகள் தெரிவுகள் ஏகமனதாகவேநடத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தினார். அதற்குப் போட்டிஇடம்பெறக்கூடாதுஎன்றும், அப்படி நடந்தால் அது கட்சியைப் பெரியளவில் பாதிக்கும் என்றும் தெரிவித்தார். தலைவர் மாவை சோ.சேனாதிராசா, சட்டத்தரணி தவராசா, சார்ள்ஸ் நிர்மலநாதன் போன்றவர்கள் அதனை ஆதரித்தனர். போட்டியின்றி தலைவர், செயலாளர் தெரிவுகள் இடம் பெறவேண்டும் என்று வலியுறுத்தினர்.

சட்டத்தரணிதவராசாகூட்டத்தில் கலந்துகொண்டவர்களுக்கு ஒரு துண்டறிக்கையை வழங்கினார். அதில் இதற்கு முன்னர் கட்சியின் தலைவர், செயலாளர்கள் எப்போது எப்படிப் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்கள் என்கிற விவரம் அடங்கியிருந்தது. 1951முதல் 2019 வரையான விவரங்கள் அதில் அடங்கியிருந்தன. தலைமைப் பதவிக்குப்போட்டியிடும்இருபிரதான வேட்பாளர்களான சுமந்திரனும் சிறீதரனும் யார் வென்றாலும் கட்சியைப் பிளவுபடுத்ததாது இணைந்து செயற்படுவோம் என்று தெரிவித்தாலும் அவர்கள் ஆதரவாளர்கள் அப்படியில்லை, அவர்கள் ஏற்கனவே சமூக ஊடகங்களில் அடிபடத் தொடங்கிவிட்டார்கள், அதனால் கட்சிக்குப் பாதிப்புத்தான் என்று தவராசா வாதிட்டார்.

கூட்டத்தில் மேலும் சிலரும் இந்தக் கருத்தை ஆமோதித்துக் கருத்துரைத்தனர். இதனால் இந்த விடயம் குறித்துப்பேசி இறுதி முடிவு ஒன்றுக்கு வருவதற்குத் தமக்குக் கால அவகாசம்தருமாறு சுமந்திரன் கேட்டார். மூன்று வேட்பாளர்களும் கலந்துபேசி ஏகமனதாக ஒரு தலைவரைத் தெரிவு செய்யலாமா என்பது தொடர்பில் ஒரு முடிவை இன்று அறிவிப்பது என்று அங்கு தீர்மானிக்கப்பட்டது. தலைமைப் பதவிக்குப் போட்டியிடுபவர்கள் ஆளுக்குஇரண்டுவருடங்கள்என்கிற ரீதியில் ஒரு இணக்கப்பாட்டுக்கு வரலாம்என்றுசட்டத்தரணிதவராசா ஒருயோசனையைமுன்வைத்தார்.

பலத்த வாதப் பிரதி வாதங்களுக்குப் பின்னர் இந்தக் காரணங்களுக்காக கட்சியின் பொதுக் குழுக் கூ-ட்டத்தையும் தேசிய மாநாட்டையும் திட்டமிட்ட நாள்களில் நடத்துவது என்றும் கூ-ட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. அதற்கிடையில் வேட்பாளர்கள் தமக்கிடையில் இணக்கத்திற்கு வருகிறார்களாக இல்லையா என்பதை இன்று மாலைக்குள் அறிவிக்க வேண்டும். அப்படி ஒரு இணக்கம் எட்டப்பட்டால் கட்சியின் பொதுக் குழுக் கூட்டமும் தேசிய மாநாடும் வழக்கம்போன்று அடுத்தடுத்த திகதிகளுக்கு மாற்றப்படலாம். இணக்கம் எட்டப்படாவிட்டால் தலைமைப் பதவிக்கானபோட்டிநிச்சயம்ஜனவரி 21நடந்தேதீரும். அதைத்தொடர்ந்து ஜனவரி 28 கட்சியின் தேசிய மாநாடும் நடத்தப்படும்.

இன்றைய கலந்துரையாடல்களில், சட்டத்தரணிதவராசாவின் யோசனைப்படி முதல் இரு ஆண்டுகளுக்கு தலைமைப் பதவியை சுமந்திரனுக்கு வழங்க சிறீதரன் இணங்குவாரானால் ஒருவேளை இந்தப் பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்படக்கூடும். ஏனெனில் தான் தனது 60 வயதில் அரசியலில் இருந்து ஓய்வுபெற்றுவிடுவேன் என்று சுமந்திரன் ஏற்கனவே அறிவித்திருக்கிறார். எனவே அதற்கிடையில் அவருக்குத் தலைமைப் பதவி வழங்கப்பட்டால், அதற்குச்சம்மதித்து சிறீதரன்எம்பிஒதுங்கிக்கொண்டால் தலைமை போட்டியின்றித் தெரிவாகலாம். இல்லையேல்போட்டி தவிர்க்க முடியாதது என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

இதற்கிடையில், இந்தத் தலைமைப்பதவிக்கானபோட்டியை முன்வைத்து அவர்களில் யாரை ஆதரிப்பது என்கிற விடயத்தில் கட்சிக்குள் பல பேரம் பேசல்களும் இடம்பெற்றுள்ளன. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டும் என்பதைப் போல, தலைமைப் பதவிக்குப் போட்டியிடுபவர்களை ஆதரித்தால்தமக்குகட்சிக்குள்பதவி அல்லது மாகாண சபைப் பதவி என்பவற்றைப்பெறுவதற்காகஇந்தப் பேரம்பேசல்கள்இடம்பெற்றுள்ளன. அவை பற்றிய விவரங்களைப் பின்னர் தருகின்றேன்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பயங்கரவாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் காணப்படும் வாக்குமூலத்தின் அடிப்படையில் ஒருவரைக் குற்றவாளியாக்கும் சரத்து நீக்கப்பட்டுள்ளது. அதற்குப் பதிலாக பொதுவான சாட்சி சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது விடயம், தற்போதைய சட்டத்தின் கீழ் தடுப்புக்காவல் உத்தரவை வழங்குவதற்கு பாதுகாப்பு அமைச்சருக்கே அதிகாரம் காணப்படுகின்றது. அத்தோடு அதனை மூன்று மாதங்கள் வரையில் மட்டுமே அவரால் நீடிக்கவும் முடியும்.

இதற்கு முந்திய சட்டமூலத்தில் பிரதிப்பொலிஸ்மாஅதிபருக்குஅந்த அதிகாரத்தை அளித்திருந்தோம். தற்போது அது, ஒருவரை விளக்கமறியலில் வைப்பதாக இருந்தால் பாதுகாப்புச் செயலாளர் ஒருமாதத்துக்கு தடுத்து வைப்பதற்கான உத்தரவைப் பிறப்பிக்க முடியும் என்று மாற்றப்பட்டுள்ளது.

அதற்குஅதிகமானகாலம்தடுத்து வைப்பதாக இருந்தால் நீதிவான் நீதிபதியினுடைய அனுமதியைப் பெறவேண்டியதுகட்டாயமாகின்றது. அத்தோடு தொடக்கத்திலேயே தடுப்புக்காவல் உத்தரவு வழங்கப்பட்டாலும் அதுகுறித்துநீதிவானுக்கு அறித்தல் விடுக்க வேண்டும். அத்துடன் இது தொடர்பில் கண்காணிக்கும் அதிகாரம் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

மூன்றாவதாக, பயங்கரவாதத்தை வரைவிலக்கணப்படுத்தியிருக்கின்றோம்.

பயங்கரவாதம்என்றசொற்பதத்திற்கான எந்த வரைவிலக்கணமும் காணப்படவில்லை. அதுவே மிகப்பெரும் பிரச்சினையாக இருந்தது. தற்போதும் பயங்கரவாதம் என்றால் சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவிலக்கணம் ஒன்று இல்லை. நாம் பிரித்தானியாவில் உள்ளதைப்போன்று அதிகளவில் கடுமையாக இல்லாத வரைவிலக்கணத்தை முன்வைத்துள்ளோம்.

பிரித்தானியாவில் உள்ள சட்டம் அங்கு எந்தவொரு திட்டமிட்ட குற்றமும் பயங்கரவாதத்துடன் தொடர்புடையாதாகவே கருதுகின்றது.

நாம், அந்தப் பகுதியை மட்டும் எமது சட்டமூலத்திலிருந்து நீக்கியுள்ளோம். ஏனையபகுதிகளை உள்ளீர்த்துள்ளோம் என்றார்.

## இன்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேல், மத்திய, மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மழை பெய்யக்கூடும் என்றுள்ளது.

இதேவேளை, 10 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

## வரி ஏய்ப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரி சேகரிப்பு செயற்பாடுகளை விரிவாக்க அரசு திட்டமிட்டுள்ளதாகவும், இதன் மூலம் நேரடி வரி வீதம் 40 சதவீதமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

நிதியமைச்சில் இடம்பெற்ற வற் வரி விழிப்புணர்வுக் கருத்தரங்கில், கலந்துகொண்ட அவர் மேற்கண்ட கருத்துக்களை வெளியிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எத்தகைய பொருளாதார நிலையில் இருந்தாலும் ஒவ்வொரு நபருக்கும் இந்தக் காலகட்டம் மிகவும் கஷ்டமானது என்று சொல்லவேண்டும். ஒவ்வொருவரினதும் வருமானம் குறைந்து, செலவுகள் அதிகரித்துள்ளதால், சிரமங்கள் எழுந்துள்ளன.

நாடு எதிர்நோக்கும் பிரச்சினையை புரிந்துகொண்டு அரசுஇதற்காகமுன்னெடுக்கும்இந்த வேலைத்திட்டத்தைத் தவிர வேறு மாற்றுவழியில்லை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப, அரசின் வருவாயை அதிகரிக்க வேண்டும். அதற்கான வரித் தளத்தை விரிவுபடுத்த அரசு முயற்சி எடுத்து வருகிறது. இதுவரை 20% ஆக இருந்த நேரடி வரி விகிதத்தை படிப்படியாக 30% ஆக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நேரடி வரியை மேலும் 40% ஆக உயர்த்த அரசு திட்டமிட்டுள்ளது. எதிர்காலத்தில் மறைமுக வரிகளின் சதவீதத்தை குறைக்கும் திறன் அரசுக்கு உள்ளது.

அத்துடன்உள்நாட்டுஇறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்யாமல் பாவனையாளர்களுக்கு போலி பற்றுச்சீட்டுகளை வழங்கி, முறையற்றவிதத்தில்இலாபமீட்டும் வர்த்தக மாபியாக்களை முற்றாகத் தடுக்கும் வகையில் சட்டங்கள் கடுமையாக அமுல்படுத்தப்படும் என்றார்.

## 5 உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற நிகழ்வில், வேலணை, வலிகாமம் மேற்கு, நெடுந்தீவு, வடமராட்சி தெற்கு மற்றும் மேற்கு ஆகிய பிரதேசசபைகளுக்கும், பருத்தித்துறை நகர சபைக்குமான உத்தியோகப்பூர்வஇணையத்தளங்களை ஆளுநர் தொடக்கி வைத்தார்.

மக்களுக்காக சேவை புரியக் கூடிய உள்ளூராட்சி நிறுவனங்கள் இவ்வாறு உத்தியோகபூர்வ இணையத்தளங்கள் ஊடாக தங்களின் பணிகளைமேற்கொள்ளஎடுத்துள்ள முயற்சிக்குபாராட்டுகளைதெரிவித்த ஆளுநர்,பொதுமக்கள்தங்களுக்கான சேவைகளை இணையத்தினூடாக பெற்றுக்கொள்வதற்கு தேவையான வசதிகளையும், வரி உள்ளிட்ட கட்டணங்களைய இணைய தளத்தினூடாக செலுத்துவதற்கான வசதிகளையும் மேம்படுத்த வேண்டும்எனவும்வலியுறுத்தினார்.

## இந்திய துணைத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸை நேற்றுச் சந்தித்து கலந்துரையாடினார்.

நாகபட்டினத்திற்கும், காங்கேசன்துறைக்கும் இடையில் பயணிகள் படகு சேவையை ஆரம்பித்தல், பலாலிவிமானநிலைய அபிவிருத்தி நடவடிக்கைகள், சுற்றுலா துறை அபிவி ருத்திகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டதாக ஆளுநர் ஊடக பிரிவு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காகவும் ஏனைய சந்திப்புக்களை நிகழ்த்துவதற்காகவும் வடக்கு மாகாணத்திற்கு கடந்த 04.01.2024 முதல் 08.01.2024 வரை பயணம் மேற்கொண்டிருந்தார்.

அவரது வருகை தொடர்பாக தமிழ்மக்கள்மத்தியில்பல்வேறுபட்ட எதிர்பார்ப்புகள் இருந்தன. மிச்சம் மிகுதியாக உள்ள அரசியல்கைதிகள் விடுவிக்கப்படவேண்டும். காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான முடிவுகள் எட்டப்படவேண்டும், காணிகள் முழுமையாக விடுவிக்கப்படவேண்டும். பதின்மூன்றாவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டு மாகாணசபை தேர்தல்கள் நடைபெறவேண்டும். பௌத்த சிங்கள மயமாக்கலை நோக்கமாகக் கொண்டு தமிழர் பிரதேசங்களில் பலாத்காரமாக நிர்மாணிக்கப்படும் பௌத்த கோயில்களின் பணிகள் நிறுத்தப்படவேண்டும்என்பனஅவற்றில்சில.

இவை தொடர்பில் ஜனாதிபதி தெளிவான பதிலை அளிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இந்த விடயங்கள் தொடர்பாக அவர் தமது பயணத்தில் எந்தவிதமான ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களையோ தெளிவுபடுத்தல்களையோமேற்கொள்ளவில்லை.

அவர் தொடர்ச்சியாகப் பேசிவரும் அபிவிருத்தி தொடர்பில் மாத்திரமே பேசினார். இதற்கு முன்னரும் அபிவிருத்தி தொடர்பில் அவர் பல்வேறு கருத்துகளைக் கூறியிருக்கின்றார். ஆனால் அவற்றுக்கான முறையான நிதி ஆதாரங்கள்கிடைக்கவில்லைஎன்ற குற்றச்சாட்டு இந்த அரசின் மேல் தொடர்ச்சியாக இருந்து வருகின்றது. ஜனாதிபதிக்கும் சிங்கள அரசியல் தலைமைகளுக்கும்கடந்தகாலத்தை நினைவுபடுத்த விரும்புகிறோம்.

போருக்கு முன்பாக, முழு இலங்கைக்கும் தேவையான விவசாய உற்பத்திகளையும் கடல் உணவுகளையும் வடக்கு -கிழக்கு மாகாணங்கள் பெருமளவில் வழங்கிவந்தன. முப்பது வருடப் போரில் எமது விவசாயம் முற்றாக அழிக்கப்பட்டது. மக்கள் இடம் பெயர்ந்தார்கள். விவசாயக் காணிகள் தரிசு நிலங்களாகவும் காடாகவும் மாறின. இருந்த ஒரு சில தொழிற்சாலைகளும் போரைக் காரணம்காட்டி அழித்தொழிக்கப்பட்டன. முழு இலங்கைக்கும் உணவளித்த மக்கள் தமக்கே வாழ்வாதாரம் இல்லாத ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். இவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து, அந்த மக்கள் பொருளாதாரத்தில்முன்னேறுவதற்கு வழிசமைத்துக்கொடுக்க வேண்டிய அரசோ அதுதொடர்பில் எத்தகைய பிரத்தியேக நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. அதுமட்டுமன்றி, காடாக மாறியுள்ள அவர்களது காணிகளை விடுவிப்பதற்கே அவர்கள் கடந்த பதினான்கு வருடங்களாகப் போராடவேண்டிய நிலையில் உள்ளனர்.

இந்த இலட்சணத்தில்தான், சிங்கள அரசின் செயற்பாடு இருக்கின்றதென்பதை ஜனாதிபதி புரிந்துகொள்ள வேண்டும். போருக்குப் பின்னர், வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் அரசின் உதவிகள் ஏதுமின்றி, தமது வாழ்வாதாரத்தையும் வாழ்க்கை முறையையும் தாமே கட்டியெழுப்பிக்கொள்வதற்காக வைராக்கியத்துடன் தொடர்ந்தும் போராடி வருகின்றனர்.

யதார்த்தங்கள் இவ்வாறிருக்கையில், ஜனாதிபதி குறிப்பிடுகின்ற வடக்குமாகாண அபிவிருத்தி என்பது எவ்வளவு தூரம் சாத்தியம் என்பதை நாங்கள் பொருத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

அதேசமயம், தமிழ்க் கட்சிகள் முன்வைத்த பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தி தமிழ் மக்களின் அரசியல், சமூக, பொருளாதார அபிலாசைகளை நிறைவேற்றுவது தொடர்பில் எந்தவிதமான ஆணித்தரமான பதில்களும் அளிக்காமல் பதின்மூன்றாவது திருத்தம் என்பது பொருளாதார அபிவிருத்திக்குப் போதுமானது என்ற கருத்தை மாத்திரம் கூறிச்சென்றிருக்கின்றார்.

பதின்மூன்றாவது திருத்தம் என்பது, இந்திய- - இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம், தமிழ் மக்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்வதற்காக உருவாக்கப்பட்ட மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை மையமாகக் கொண்டது. கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக மாகாணசபை தேர்தல்களை நடாத்தாமல் இருப்பதுடன், பதின்மூன்றாவது திருத்தத்தினூடாகமாகாணங்களுக்கு வழங்கப்பட்ட பல அதிகாரங்கள் மீளவும் மத்திய அரசால் பறிக்கப்பட்டும் இருக்கின்றது.

இலங்கையின் அரசியல் ஸ்திரத்தன்மைக்கும், பொருளாதார அபிவிருத்திக்கும் தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ப முக்கியமானது. இவை இல்லாமல், நாட்டின் பொருளாதார அபிவிருத்தி என்பது ஒருபொழுதும் சீராக நடைபெறாது. வெளிநாட்டு முதலீடுகளையும் அரசாங்கம் எதிர்பார்க்க முடியாது.

இதனைப் புரிந்துகொண்டு மாகாணசபைத் தேர்தல்களை நடாத்தி, அதற்குரித்தான முழுமையான அதிகாரங்களை வழங்கி, சர்வதேச முதலீடுகளைக் கொண்டுவருவதற்கான அதிகாரங்களை மாகாண அரசுகளுக்குவழங்குவதன்மூலமே இலங்கையின் பொருளாதரமும் அரசியல்ஸ்திரத்தன்மையும்வலுவடையும்.

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க அவர்கள்கொழும்பிலும்சரி, யாழ்ப்பாணத்திலும்சரி புலம்பெயர் தமிழ் மக்களின் முதலீடுகள் அவசியம் என்பதை மீண்டும் மீண்டும் கூறிவருகின்றார். கடந்தகாலங்களில் தென்பகுதியிலிருந்த தமிழ் மக்களின் பொருளாதாரம் என்பது அடிக்கடி அரசாங்கம் உருவாக்கிய இனக்கலவரங்களினால் நிர்மூலம் செய்யப்பட்டது.

இதன் காரணமாக, பல இலட்சம் கோடி மதிப்புள்ள சொத்துகளை தமிழ் மக்கள் இழந்து அகதிகளாகக் கப்பலேற்றி அனுப்பப்பட்ட வரலாறுகள் தமிழ் மக்களுக்குண்டு. இவ்வாறான ஒரு சூழ்நிலையில், புலம்பெயர் தமிழ் மக்களின் முதலீடுகளுக்கு எவ்விதப் பாதுகாப்பும் இல்லாமல், அவற்றை எதிர்பார்ப்பதென்பது தமிழ் மக்களை மேலும் மேலும் முட்டாள்கள் என்று நினைப்பதற்கு ஒப்பாகும்.

மாகாணங்களுக்கென ஒதுக்கப்பட்ட பொலிஸ் அதிகாரங்கள், காணி அதிகாரங்கள் போன்றவற்றை வழங்கி, அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரங்களையும் மாகாணங்களுக்கு வழங்கி, சர்வதேச முதலீடுகளைக் கொண்டுவருவதற்கான அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்குவதனூடாகத்தான் புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகளுக்கு பாதுகாப்புக் கிட்டும் என்பதை ஜனாதிபதியும் அவருடைய தலைமையிலான அரசும் புரிந்துகொள்ள வேண்டும். இதைவழங்குவதனூடாகஜனாதிபதி குறிப்பிடும் வடக்கை பொருளாதார மையமாக மாற்றலாம் என்பது மட்டுமன்றி, தென் ஆசியாவின் நிதி ஆதாரமையமாகவும்மாற்றமுடியும்.

இவை ஒருபுறமிருக்க, யுத்தம் முடிவுற்று பதினான்கு வருடங்கள் கடந்த நிலையில், தமிழ் மக்கள் தமது காணிகளை முழுமையாக விடுவிக்கக் கோரிவருகின்ற போதிலும், இன்னமும் அது முழுமையடையவில்லை. இப்பொழுதும்கூட இடம்பெயர்ந்த மக்கள் யாழ்ப்பாணத்தில் முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் வாடகை வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களதுநிலங்கள்காணிகளை முப்படையினரும் பலாத்காரமாக தம்வசம்வைத்திருக்கின்றனர். அவை விடுவிக்கப்படவேண்டுமாயின், ஜனாதிபதிதான் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமே தவிர, மாவட்ட செயலாளர்களோ ஏனைய அதிகாரிகளோ எடுக்க முடியாது.

2025ஆம் ஆண்டுக்குள் மீள்குடியேற்றம் முழுமைபெற வேண்டும்என்று கூறும் ஜனாதிபதி, காணிகளை விடுவிப்பதற்கான ஆக்கபூர்வமானஅறிவுறுத்தல்களோ நடவடிக்கைகளோ எடுக்கவில்லை என்பதுதான் யதார்த்தமானது. இத்தகைய சூழ்நிலையில், அவர் குறிப்பிட்ட காலத்திற்குள் மீள்குடியேற்றங்கள்

தொடர்ச்சி 10ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# நாட்டின் அனைத்து பகுதிகளிலும் சாதியப் பாகுபாடு தொடர்கிறது

## டிலான் பெரேரா சுட்டிக்காட்டு

வடக்கு, கிழக்கு, தெற்கு மற்றும் மலையகம் என நாட்டின் அனைத்து பகுதிகளிலும் சாதிப் பாகுப்பாடுகளும் ஒடுக்குமுறைகளும் இன்னமும் தொடர்கின்றன என நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை இனவாதம் மற்றும் மதவாதம் பற்றியே நாம் பேசுகிறோம். ஆனால், கண்ணுக்குத் தெரியாத ஒரு பிரச்சினையாக இது உள்ளதுடன் இன, மதப் பிரச்சினைகளுக்கு அப்பால் சாதிய ரீதியாக மக் கள் ஒடுக்குமுறைகளுக்கு முகங் கொடுக்கின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்

மேலும் அரசியலிலும் இந்தப் பிரச்சினை காணப்பட்டது. ஆனால், இந்த சாதிய முறையை உடைத்தெறிந்து அதனை சவாலுக்கு உட்படுத்திய ஒரே தலைவராக ரணசிங்க பிரேமதாஸ காணப்படுகிறார்.

ஆனால், வேறு எந்தவொரு தலைவராலும் இதனை செய்ய முடியாது போனது. ஆகவே, நல்லிணக்க அலுவலகத்தின் ஊடாக காலங்காலமாக தொடரும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுவொன்றைப் பெற்றுக்கொடுப்பதும் அவசியமாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(05)

# போதைப்பொருள்களை சூட்சுமமாக தம்வசம் வைத்திருந்த மூவர் கைது

## அம்பாறையில் சம்பவம்

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் அட்டப்பள்ளம் பிரதேசத்தில் திங்கட்கிழமை மாலை நிந்தவூர் பொலிஸார் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின் போது பெருந்தொகையான பணம், போதைப் பொருள்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

நிந்தவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.எம். நஜீப் வழிநடத்தலில் இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட இச்சுற்றி வளைப்பு செவ்வாய்க்கிழமை காலையும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் கைது செய்யப்பட்ட 32, 33, 34 வயதுடைய 3 சந்தேக நபர்களிடம் தொடர்ந்தும் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

நாடு பூராகவும் விசேட போதை பொருள் ஒழிப்பு திட்டத்தை அமுல்படுத்தும் வகையில் பதில் பொலிஸ் மா அதிபர் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ள நிலையில் அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம்.என் ஜயபத்ம ஆலோசனையில் நிந்தவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.எம். நஜீப் வழிநடத்தலில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(05)

# இளம் பிக்குகள் பாலியல் முறைகேடு விசாரணைகள் ஒத்தி வைக்கப்பட்டன

சட்டமா அதிபரின் கவனத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் தொடர்பில் உரிய ஆலோசனை கிடைக்கும் வரை இளம் பிக்குகள் மீதான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு பல நிபந்தனைகளுடன் பிணையில் விடுவிக்கப்பட்ட பிரதம பௌத்த மதகுரு தொடர்பான வழக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 02 ஆம் திகதி வரை மறுவிசாரணைக்காக ஒத்தி வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விகாரை ஒன்றில் வைத்து 3 இளம் பிக்குகள் பாலியல் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பிலான வழக்கு செவ்வாய்க்கிழமை கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் முன்னிலையில் எடுத்து கொள்ளப்பட்ட நிலையில் பொலிஸார் மற்றும் பிரதிவாதியின் சட்டத்தரணிகளின் விண்ணப்பங்கள் ஆராயப்பட்டு மறுவிசாரணைக்காக எதிர்வரும் ஏப்ரல் மாதம் 02 ஆம் திகதிவரை ஒத்தி வைக்குமாறு கல்முனை நீதிவான் உத்தரவிட்டார்.

அம்பாறை மாவட்டம் சடயந்தலாவை பகுதி ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 3 இளம் பிக்குகள் கல்முனை பகுதியில் அமைந்துள்ள விகாரை ஒன்றில் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவம் ஒன்றின் அடிப்படையில் 2022 செப்ரெம்பர் 13 ஆம் திகதி கல்முனை சுபத்ராராமய விகாராதிபதியாக ரண்மு-த்துக்கல சங்கரத்ன தேரர் என்றழைக்கப்படும் பிரதான பௌத்த மதகுரு அம்பாறை மாவட்ட சிறுவர் பெண்கள் விசேட பிரிவினரால் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்-யப்பட்டு கல்முனை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தமை யாவரும் அறிந்ததே.

இதனடிப்படையில் கல்முனை நீதிமன்ற நீதிவான் கைதான சந்தேக நபரான பௌத்த மதகுரு தொடர்புபட்ட 3 வழக்குகளில் தலா 3 பேர் வீதம் 9 பேர் கொண்ட 5 லட்சம் பெறுமதியான சரீரப்பிணையில் செல்ல வேண்டும். ஒவ்வொரு மாத இறுதியில் மீண்டும் அருகில் உள்ள கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்திற்கு சென்று கையொப்பம் இடுதல் குறித்த வழக்கின் சாட்சிகள் குடும்பத்தினரை அச்சுறுத்துதல் வழக்கு தொடர்பிலான தலையீடு செய்யாதிருத்தல் வேண்டும். வெளிநாடு செல்வதற்குத் தடை அதாவது கடவுச்சீட்டினை மன்றிற்கு ஒப்படைத்தல் வேண்டும். அவ்வாறு தன்னிடம் கடவுச்சீட்டு இல்லைஎனின் உரியதரப்பினின் உறுதிப்படுத்தி மன்றிற்கு தெரிவிக்க வேண்டும் கிராம சேவகரின் நலச்சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும் என்ற கடும் நிபந்தனையுடன் குறித்த பௌத்த மதகுரு பிணையில் விடுவித்து உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், இவ்வழக்கு மீண்டும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 13 ஆம் திகதி வரை வழக்கை நீதிவான் ஒத்தி வைக்க உத்தரவிட்டார்.

(05)

# ஹவுதிகளை அடக்க கடற்படையை எப்படி ஜனாதிபதி அனுப்ப முடியும்?

## ஹக்கீம் கேள்வி



எமது நாடு அணிசேரா நாட்டுக் கொள்கையைப் பின்பற்றுவதாக இருந்தால் ஹவுதி கிளர்ச்சியாளர்களை அடக்குவதற்கு ஜனாதிபதி எவ்வாறு எமது கடற்படை கப்பலை அனுப்ப முடியும் என கேட்கிறோம் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் விசேட கூற்றொன்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

சபாநாயகருடன் நாங்கள் கடந்த வாரம் உகண்டா நாட்டுக்கு சென்றிருந்தோம். அதேபோன்று எதிர்வரும் 18 ஆம் திகதி உகண்டாவில் அணிசேரா நாடுகளின் தலைவர்களின் மாநாடு இடம்பெற இருக்கிறது. அந்த மாநாட்டுக்கு ஜனாதியும் செல்ல இருக்கிறார்.

எமது நாட்டின் அணிசேரா நாடுகளின் கொள்கை என்ன? எனக் கேட்கிறோம். அமெரிக்க விசுவாசமா எமது அணிசேரா கொள்கை? அமெரிக்காவின், இஸ்ரேலின் தேவைக்கு மேலும் சில நாடுகளுடன் இணைந்து ஹவுதிகிளர்ச்சியாளர்களை அடக்குவதற்கு எமது கடற்படையை அனுப்புவதாக இருந்தால், ஜனாதிபதி எதற்காக அணிசேரா நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொள்ள உகண்டாவுக்கு செல்ல வேண்டும்.

அதனால் எமது நாடு அணிசேரா கொள்கையைப் பின்பற்றும் நிலையில் அமெரிக்காவுக்கு விசுவாசமாக இருந்து, ஹவுதிகளை அடக்குவதற்கு அமெரிக்காவின் தேவைக்காக செயற்பட்டு, கிண்டல் செய்ய வேண்டாம். - என்றார்.

(05)

# நீதிமன்றத்தை அவமதித்த ராணுவ உயர் அதிகாரிக்கு விளக்கமறியல்

நீதிமன்றத்தை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இராணுவ உயர் அதிகாரி ஒருவருக்கு மட்டக்களப்பு மாவட்ட மேல் நீதிமன்றத்தால் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதி வரை விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.


கொலைச் சம்பவம் ஒன்று தொடர்பாக குறித்த இராணுவ அதிகாரி மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் தனது வரவைப் பதிவுசெய்ய வேண்டும் மற்றும் தனது கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவேண்டும் என நீதி

மன்றம் விடுத்த உத்தரவை குறித்த இராணுவ அதிகாரி அவமதித்ததன் காரணமாக பிணை முறியை மீறிய குற்றத்திற்காக நீதிமன்றத்தை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் விளக்கமறியல் உத்தரவை மேல் நீதிமன்ற நீதிபதி திருச்செல்வம் ஜோசப் பிரபாகரன் விதித்தார்.

மேற்படி இராணுவ உயர் அதிகாரி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(05)

# கோழிக்கோடு ரயில் நிலையமாக மாறிய மருதானை ரயில் நிலையம்








கொழும்பு மருதானை ரயில் நிலையம் கேரளாவின் கோழிக்கோடு ரயில் நிலையமாக மாற்றப்பட்டுள்ளது. இதன்காரணமாக குறித்த ரயில் மார்க்கமாக பயணித்த பயணிகளுக்கு குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், இது குறித்து தெரியவந்ததாவது -

இந்திய திரைப்படக் காட்சியொன்று மருதானை ரயில் நிலையத்தில் எடுக்கப்படுகிறது.

இதன்காரணமாக மருதானை ரயில் நிலையத்தின் பெயர்பலகை கேரளாவில் உள்ள கோழிக்கோடு ரயில் நிலையமாக பெயர் மாற்றப்பட்டு இங்கு கரிக்கோச்சி ரயில் காட்சிப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தேர்தல் நல்லதுதான்

தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைமையைத் தேர்ந்தெடுப்பதில் போட்டி இருக்கலாமா இல்லையா என்கிற வாதப் பிரதிவாதம் பேசுபொருளாகியுள்ளது. கட்சியின் வரலாற்றில் புதிய தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் ஒன்றை கட்சி இந்தத் தடவையே முதல் முறையாகச் சந்திக்கும் நிலமை தோன்றியிருக்கின்றது. ஆனால் அப்படியொரு தேர்தல் நடைபெறக்கூடாது என்றொரு நிலைப்பாடு கட்சிக்குள் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

தேர்தல் அல்லது மக்களாட்சி (ஜனநாயக) முறையிலான தெரிவு அவ்வளவு தூரம் தீண்டத்தகாத ஒன்று என்று தமிழ் அரசுக் கட்சி நினைக்கின்றதா என்கிற கேள்வியை, கட்சியினர் பலரும் வலியுறுத்தும் போட்டியின்றிய தெரிவு எனும் கருத்து எழுப்புகின்றது. மக்களிடம் இருந்து போட்டி மூலம் நாடாளுமன்றத் தெரிவை ஏற்றுக்கொள்பவர்கள், அதிலும் விருப்பு வாக்கு முறையில் நாடாளுமன்ற, மாகாண சபைத் தெரிவுகளை ஏற்றுக்கொள்பவர்கள் கட்சிக்குள் மட்டும் அந்த மக்களாட்சி முறையை ஏற்றுக்கொள்ள மறுப்பது நியாயமானது அல்ல.

அதுவும்போக, தமிழ் அரசுக் கட்சி மக்களாட்சித் தத்துவத்திற்கான முன்னுதாரணமாக இன்று விளங்கவேண்டியிருப்பது காலத்தின் கட்டாயம் என்பதை அது புரிந்துகொள்ளவேண்டும்.

தமிழ் அரசியல் பரப்பில் உள்ள மக்களாட்சிப் பாரம்பரியமுள்ள பழம்பெரும் கட்சி. மற்றைய கட்சிகளில் தமிழ்க் காங்கிரஸ் தவிர்த்துப் பெரும்பாலானவை இயக்கங்களாக இருந்து அரசுகளின் பொது மன்னிப்பின் கீழ் அரசியல் கட்சிகளாகத் தம்மை உருமாற்றிக்கொண்டவை. இவற்றிடம் மக்களாட்சிப் பண்பு மிகக் குறைவாகவே இருக்கின்றது.

இந்தக் கட்சிகளின் தலைமை மிக நீண்ட காலமாக யாரோ ஒருவருக்குச் சொந்தமானதாகவே இருக்கின்றது. அவராக விலகாத வரையில் அவரது தலைமையைச் சவாலுக்கு உட்படுத்தவே முடியாது என்பதான இரும்புக் கட்டுப்பாடுகளுடன்தான் இவை எல்லாம் காணப்படுகின்றன. இது மிக மோசமான செயல். அரசியலின்பால் மக்கள்நம்பிக்கை இழப்பதற்கான காரணங்களில் இது முக்கியமானது; முதன்மையானது. இந்த நிலமை மாறவேண்டும் என்றால் தமிழ் அரசுக் கட்சிபோன்ற ஒரு கட்சி அதற்கான முன்னுதாரணமாக மக்களாட்சித் தத்துவத்தை முழுமையப் பின்பற்றுகின்ற முன்னுதாரணமாகத் திகழ வேண்டியது அவசியம்.

போட்டி கட்சிக்குள் பிளவைக் கொண்டுவரும் என்பது அபத்தமான கருத்து. அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரைத் தேர்ந்தெடுக்கும் அந்தக் கட்சியின் முறையை உட்கட்சி மக்களாட்சிக்கான அதியுச்ச உதாரணம். அங்கே போட்டியிடும் வேட்பாளர்களில் ஒருவர் வென்று ஒருவர் தோற்பதற்காக கட்சி உடைவதில்லை. இன்னும் சொல்லப்போனால் அப்படிப் போட்டியிடும் வேட்பாளர்கள் ஒருவரை ஒருவர் மதித்து அதிபராகவும் துணை அதிபராகவும் பணியாற்றியிருக்கிறார்கள். அதுபோன்ற ஒரு சரியான, முறையான மக்களாட்சிப் பண்புக்கான உதாரணமாக தமிழ் அரசுக் கட்சியும் மாறவேண்டும். அது காலத்தின் கட்டாயம்.

30 வருடப் போரை அடுத்து தமிழ்ச் சமூகம் தனது சகிப்புத் தன்மையையும் மக்களாட்சித் தனத்தையும் இழந்து நிற்கின்றது. அதனால்தான் எந்த ஒரு அமைப்பை எடுத்தாலும் அதற்குள் சர்ச்சைகள், பிரச்சினைகள், பிளவுகள். வேற்றுமையில் ஒற்றுமை என்பதே என்னவென்று தெரியாத ஒரு சமூகமாகத் தமிழ்ச் சமூகம் மாறி நிற்கின்றது. இந்த நிலையில் இருந்து தமிழர்கள் வெளியேவர அவர்களுக்கு ஒரு சிறந்த முன்னுதாரணம் தேவையாக இருக்கின்றது. அதற்கான தலைமைத்துவத்தை தமிழ் அரசுக் கட்சி வழங்கவேண்டும். சமூகத்தை நல்வழிப்படுத்தாத கட்சி பின்னர் இருந்தென்ன லாபம்?

அதுபோன்றே மற்றைய கட்சிகளும் எப்படி இயங்கவேண்டும் என்பதற்கான அழுத்தத்தையும் முன்னுதாரணத்தையும் வழங்குவதாக தமிழ் அரசுக் கட்சி உருவாகவேண்டும். வெறுமனே நாங்கள் தந்தை செல்வா உருவாக்கிய கட்சி என்று சொல்லித் திரிவதில் பயனில்லை. தந்தை செல்வா ஒரு உயரிய மக்களாட்சிக் கட்டமைப்பை தமிழ் அரசுக் கட்சிக்குள் உருவாக்கி வைத்துள்ளார். அவரது காலத்தில் சமூகத்தில் மக்களாட்சி மாண்பு செழித்திருந்தபோது, கட்சிக்குள் ஏகமனதான தேவை இருந்திருந்திருக்கலாம்.

ஆனால் இன்று இந்தச் சமூகம் வேற்றுமையில் எப்படி குறிக்கோள் நோக்கி ஒற்றுமைப்படுவது என்பதை அறிந்துகொள்ளவேண்டியதாக இருக்கின்றது. தமிழர்களின் அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு அது அத்தியாவசியமாக உள்ளது. எனவே அதனைக் கற்றுக்கொடுக்கவேண்டிய அவசியம் தமிழ் அரசுக் கட்சிக்கு உள்ளது. எனவே தலைமைப் பதவிக்குத் தேர்தலே வேண்டாம் என்பதை விடுத்து, அதனை மிகச் சிறப்பாக, உன்னதமாக நடத்துவதற்கான வழிவகைகள் குறித்தே கட்சி இப்போது யோசிக்கவேண்டும்.

இந்தத் தலைமைப் போட்டியால் கட்சி பிளவுபட்டுவிடுமோ என்ற அச்சத்தைப் போக்கும் வகையில் தமது ஆதரவாளர்களைக் கட்டிப்போட்டு, அவர் பொதுவெளிகளில் தேவையற்று ஒருவர் மீது ஒருவர் சேறடிப்பதைத் தடுத்து நிறுத்தி நல்லதொரு உட்கட்சி ஜனநாயகத்தை வெளிப்படுத்திக் காட்டும் வகையில் இந்தத் தேர்தலை நடத்தி முடிப்பதை வேட்பாளர்கள் உறுதிப்படுத்தவேண்டும். அதுவே அடுத்த தலைமுறைக்கான புதிய தலைவர்களாக அவர்களைத் தகுதிப்படுத்தி நிற்கும்.




# மாற்ற முடியாதது எதுவுமல்லை

க.பழனித்துரை

இன்று பலரும் "நம் அரசியல் சீர்கெட்டு விட்டது", "நம் சமுதாயம் அறமிழந்து செயல்படுகிறது", "குடும்ப வாழ்க்கை சிதைவுறுகிறது", "பக்தி வேடமாகிவிட்டது", "ஒட்டு மொத்த சமூகமும் லட்சியற்றதாக மாறிவிட்டது" என்றெல்லாம் புலம்புகின்றனா.

இப்படிக் கூறுவோா யாரென்று பார்த்தால் அன்றாடம் வேலைக்குச் சென்றுத் தங்கள் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் சாதாரண மனிதாகள் அல்லா். மெத்தப் படித்தவாகள், செல்வந்தாகள், அரசில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற உயா அதிகாரிகள் ஆகியோரே. இவாகள் இப்படிப் பேசி, தாங்கள் ஒரு சமூகக் கடமையை நிறைவேற்றிவிட்டதாக எண்ணுகின்றனா.

அப்படிப் புலம்புவோரிடம், "இதை மாற்ற நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்" என்று கேட்டால், "நாம் என்ன செய்ய முடியும்? எப்போதாவது சமூகம் திருந்தாதா என்று எண்ணி காலத்தைக் கழிக்கிறோம்" என்று சலிப்பாகக் கூறுவார்கள். சாதாரண மனிதாகள், சீர்கெட்ட அரசியலில், அரசு நிர்வாகத்தில், அறமற்ற வணிகத்தில் வருகின்ற சவால்களை ஏதோ ஒரு வகையில் சமாளித்துக் கொண்டு வாழ்க்கை நடத்துகின்றனா.

இவாகளுக்கும் அந்த ஏக்கம் உண்டு, தவிப்பு உண்டு. ஆனால் புலம்புவதில்லை. அதைச் சீர்திருத்த அவாகளுக்கு நேரமும் இல்லை. இந்த நிலை மாறாதா என்று ஏங்கித் தவிப்போருக்கு, சமூக மாற்றத்திற்கான அடிப்படைச் செயல்பாடுகள் பற்றித் தெரிவதில்லை. அதைத் தெரிந்துகொண்டால், அவாகளும் அந்த மாற்றத்திற்கான செயல்பாடுகளில் தங்களையும் இணைத்துக் கொண்டு செயல்பட முடியும். வீணாக ஓலமிடத் தேவையில்லை.

உலகத்தில் நடந்த மாற்றங்களுக்கு அடிப்படை மனிதாகளின் சிந்தனை மாறுவதுதான். நாம் அடைய வேண்டிய இலக்கை உருவாக்கி, நம்பிக்கையுடன் செயல்பட்டால் மாற்ற முடியாதது எதுவுமில்லை.

மன்னராட்சிக் காலத்தில் எதிர்காலத்தில் மக்களாட்சி என்று ஒன்று வரப்போகிறது என யாரும் ஊகிக்கவில்லை. ஒரு சிலா எழுதியும், பேசியும் வந்தது, மக்கள் மனதில் ஒரு கிளாச்சியை ஏற்படுத்தி மாற்றத்தைக் கொண்டு வந்துவிட்டது.

அதுதான் நாம் இன்று அனுபவித்து வரும் குறைந்தபட்ச மக்களாட்சி (ஜனநாயகம்). அந்த மக்களாட்சி மாபெரும் மாற்றங்களைக் கொண்டுவரும் ஆற்றல் பெற்றது. அந்த மாற்றங்களைக் கொண்டு வரவேண்டும் என்றால் அதற்கான சமூகம் உருவாகவேண்டும். ஒரு அரசியலோ, அரசோ, ஆளுகையோ, நிர்வாகமோ தனித்துச் செயல்படுவது அல்ல. அவை அனைத்தும் ஒரு சமூகத்தில்தான் செயல்படுகின்றன.

அந்தச் சமூகம் எத்தன்மையதாக இருக்கிறதோ அத்தன்மையில்தான் அங்கு செயல்படும் அனைத்து நிறுவனங்களும் செயல்படும். எனவே நாம் எதிர்பார்க்கின்ற மாற்றத்திற்காக முதலில் நாம் மாறவேண்டும், நம் குடும்பமும் மாறவேண்டும். நாமும் நம் குடும்பமும் மாறினால் நாம் செயல்படும் இடங்களும் மாறும். அது ஒரு தொடா நிகழ்வாக மாறி ஒரு நல்ல சமுதாயம் உருவாகிவிடும்.

ஒரு நல்ல சமூகத்தில் தீயவாகள் தலைமைப் பதவிக்கு வர இயலாது. சமூகம் நல்லசிந்தனை நற்பண்புகள் கொண்டதாக மாறிவிட்டால் நல்லவாகளையே அது தலைமைப் பதவிக்கு கொண்டுவரும். எனவே, நம் ஆசிரியாகள் தங்கள் குடும்பத்தைப் பற்றி மட்டும் சிந்திக்காமல் சமூகம் குறித்து சிந்தித்து செயல்பட ஆரம்பித்தால் பாடசாலைகள் மூலம் மிகப் பெரிய மாற்றத்தை சமூகத்தில் ஏற்படுத்திவிட முடியும்.

மாணவாகளைப் பொறுப்புமிக்க மாணவாகளாக பள்ளிக்கும், பொறுப்புமிக்க குடிமக்களாக நாட்டிற்கும் நம் ஆசிரியாகள் தயாரித்துவிட முடியும். அப்படிப் பணி செய்வதன் மூலம் பெற்றோர்களையும் பொறுப்புமிக்க பெற்றோராக மாற்ற முடியும், பொறுப்புமிக்க பெற்றோராக மட்டுமல்ல, பொறுப்புமிக்க வாக்காளாகளாகவும் மாற்ற முடியும்.

பெற்றோர்கள் பள்ளியுடன் இணையும்போது, பள்ளி சமூகத்திற்கானதாக மாறி பள்ளியின் பொறுப்பை சமூகம் எடுத்துக்கொள்ளும். ஒட்டு மொத்த கிராமச் சூழலையே ஒரு பள்ளியால் மாற்ற முடியும். பள்ளி முறையாகச் செயல்பட்டு பஞ்சாயத்தின் கவனத்தை ஈா்த்து பள்ளியை மேம்படுத்துவதற்கு பஞ்சாயத்தை பயன்படுத்திக் கொள்ள முடியும்.

ஒவ்வொரு ஆசிரியரும் சமூகச் சிந்தனையோடு செயல்பட ஆரம்பித்து பள்ளிச்சூழலை, வகுப்பறைச் சூழலை மாற்றுவதன் மூலம் மிகப்பெரும் மாற்றங்களை மாணவாகளிடம் மட்டுமல்ல ஒட்டு மொத்த சமூகத்திலும் ஏற்படுத்தி விடலாம்.

லட்சிய சமுதாயத்தை எப்படி நம்மால் உருவாக்க முடியும் என்று யாரும் திகைக்க வேண்டியதில்லை. எந்த பெரும் செயலையும் நாம் இருக்கும் இடத்தில் சிறிது சிறிதாய் தொடாந்து செய்தால் எதுவும் சாத்தியமே. இதனை ஜப்பானியாகள் கெய்சன் என்ற முறையின் மூலம் விளக்கியுள்ளனா.

கெய்சன் என்பது பெருமாற்றத்திற்கான தொடா நிகழ்வுகளை சிறிது சிறிதாக நடத்தும் முறை. இதை எளிதாக விளக்க வேண்டுமென்றால், ஆசிரியா ஒருவா பள்ளியை மாற்ற வேண்டும் என்று முடிவு செய்தால், அது அனைவரையும் இணைத்துச் செயல்பட்டால் தான் முடியும் என்று எண்ணியிருக்கக்கூடாது.

யாரைப்பற்றியும் கவலைகொள்ளாது தன்னுடன் ஒத்துழைப்பவாகளுடன் -அது ஆசிரியராக இருக்கலாம், மாணவராக இருக்கலாம், சமூக ஆர்வலராக இருக்கலாம்- அவர்களுடன் இணைந்து மாற்ற முடியும். அவாகளுடன் இணைந்து, வகுப்பறையை தூய்மை செய்வது, வகுப்பறையில் வெளிச்சம், காற்றோட்டம் உருவாக்குவது, பள்ளி வளாகத்தைத் தூய்மை செய்வது, கழிப்பறையைத் தூய்மையாக்குவது அனைத்தையும் செய்யலாம்.

மாணவாகளையும் தூய்மைப் பணியில் ஈடுபடுத்தலாம். இப்படிப்பட்ட சிறு சிறு பணிகளை அதிக செலவு இல்லாமல் செய்யலாம். அப்படிச் செயல்படும்போது ஏற்படும் மாற்றங்கள் பலருக்கு நம்பிக்கையை உருவாக்கும். இதன் விளைவாக பலா தாமாக முன்வந்து நம் செயல்பாடுகளில் இணைந்துகொள்வார்கள்.

சிறு சிறு பணிகள் செய்து ஒரு பள்ளியை மாற்றுவது, அதுபோல ஒவ்வொருவரும் தாங்கள் பணி செய்கின்ற இடங்களில் ஒன்றிணைந்து சிறு சிறு பணிகளைச் செய்து மாற்றங்களைக் கொண்டு வந்து மக்களின் கவனத்தை ஈா்த்து செயல்பட வைப்பது - இவைதான் கெய்சன் முறை.

எனவே எந்தவொரு பெருமாற்றத்திற்கும் ஒரு சிறு பணியே தேவை. அதை நாம் செய்தாலே மிகப்பெரிய மாற்றத்தை கல்வியில் மட்டுமல்ல எல்லா இடங்களிலும் கொண்டுவர முடியும்.

அதனால்தான் மகாத்மாகாந்தி "நீ எந்த மாற்றத்தை சமூகத்தில் கொண்டுவர விரும்புகின்றாயோ அந்த மாற்றத்தை முதலில் உன்னிடத்தில் கொண்டுவர வேண்டும்" என்றாா்.

ஆசிரியப்பணி என்பது நான்கு சுவாகளுக்குள் நடைபெறும் பணி அல்ல. சமூகம் மாறுவதற்கு செய்யும் மகத்தான பணி. நாங்கள் சாதாண ஆசிரியாகள் அல்லா். பல பணிகளுக்கு தலைமை ஏற்கும் தலைவாகள். விரைவில் நல்ல சமூகம் உருவாகும் என்ற நம்பிக்கையை அவர்கள் ஏற்படுத்துகிறார்கள்

# 36,385 பட்டதாரி ஆசிரியர்களை விரைவில் நியமிக்க நடவடிக்கை

## கல்வி அமைச்சர் சுசில் தகவல்



தேசிய மற்றும் மாகாண மட்ட பாட சாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக 36 ஆயிரத்து 385 பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அத்துடன் 14,385 மாகாண மட்ட ஆசிரியர்களை நியமிப்பது தொடர்பிலும் மேலும் 21,000 அபிவிருத்தி உத்தியே-ாகத்தர்களை நியமிப்பது தொடர்பிலும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு மீதான விசாரணைகள் இந்த வாரத்தில் இடம்பெற்று அதற்கான தீர்ப்பு கிடைத்ததும் உடனடியாகவே அந்த நியமனங்களை வழங்குவது தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் ரோஹிணி குமாரி விஜேரத்ன எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஆசிரியர்களுக்கான வெற்றிடம் காணப்படுவதை ஏற்றுக்கொள்கின்றோம். ஆசிரியர்கள் ஓய்வு பெற்றுள்ளமை விடுமுறையில் சென்றுள்ளமை மற்றும் ஆசிரியர்கள் பதவி விலகியுள்ளமை உள்ளிட்ட காரணங்களால் ஆசிரியர் வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன.

அந்த வகையில் அதிகளவு ஆசிரியர் வெற்றிடங்கள் மாகாண மட்ட பாடசாலைகளிலேயே காணப்படுகின்றன. அந்த வகையில் மாகாண மட்ட பாடசாலைகளில் வெற்றிடங்களை நிரப்புவதற்காக பட்டதாரிகளை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தமிழ், சிங்கள, ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்களுக்காக பட்டதாரிகள் நியமிக்கப்படவுள்ளனர். 60 வயது நிறைவடைந்துள்ள நிலையில் 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் 6018 பேர் ஓய்வு பெற்றுள்ளனர்.

அத்துடன் அமைச்சரவை தீர்மானத்தின்படி பதவியை இராஜினாமா செய்தமை, விடுமுறையில் சென்றுள்ளமை மற்றும் ஓய்வு பெற்றுள்ளமை காரணமாக மாகாண மட்டத்தில் ஏற்பட்டுள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளரால் அனைத்து மாகாணங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாகாணங்களுக்கு இவ்வாறு இணைத்துக்கொள்ளப்படுவதற்கான அறிவிப்பு விடுக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் மேல் மாகாணத்திற்கு 5000 பட்டதாரி ஆசிரியர்களும் தென் மாகாணத்திற்கு 1028, மத்திய மாகாணத்திற்கு 1067, வடமத்திய மாகாணத்திற்கு 1408, வடமேல் மாகாணத்திற்கு 665, ஊவா மாகாணத்திற்கு 590, சப்ரகமுவ மாகாணத்திற்கு 877 என மொத்தமாக 10,635 ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

அது தொடர்பில் அறிவிப்பு செய்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு பரீட்சை நடத்தப்பட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு நியமனம் வழங்குவதற்கு முற்படுகையில் நீதிமன்றத்தில் அதற்கு எதிராக மனு தாக்கல் செய்யப்பட்ட நிலையில் மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளதால் இரண்டு வழக்குகள் தொடர்பில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது..

அந்த வகையில் 10 ஆயிரத்து 635 பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பது தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அதற்கு மேலதிகமாக விஞ்ஞானம், கணிதம், மொழி, சர்வதேச மொழி, தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்காக 5450 பட்டதாரிகளை இணைத்துக் கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்தது. அவற்றில் 1700 பட்டதாரிகள் தேசிய பாடசாலைகளுக்கு நியமிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கல்வி பொது தராதர உயர்தரப் பரீட்சை நிறைவு பெற்றதும் இந்த நியமனங்களை வழங்கு-வதற்கான நேர்முக பரீட்சை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேவேளை 21,000 அபிவிருத்தி உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில் நீதிமன்ற தடை உத்தரவு காரணமாக அது தடைப்பட்டது. அது தொடர்பான வழக்கு தீர்ப்பு விரைவில் கிடைத்ததும் அவர்களையும் ஆசிரியசேவையில் இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். - என்றார். (05)

# பதுளை – கொழும்பு பிரதான வீதியில் போக்குவரத்து தடை

மண் சரிவு காரணமாக பதுளை - கொழும்பு பிரதான வீதியில் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

ஹாலி-எல 7 ஆவது மைல் கட்டை பகுதிக்கு அருகில் செவ்வாய்க்கிழமை இரவு இந்த மண் சரிவு ஏற்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

தற்போது பதுளையில் இருந்து உடுவர வரையிலும், பண்டாரவளையில் இருந்து உடுவர வரையிலும் பஸ் சேவை நடைபெறுகிறது. அடம்பிட்டிய பண்டாரவளை வீதியை மாற்று வழியாக பயன்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee
Chikne Fried Rice with
Vegetable
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# தொழிற்சங்க நடவடிக்கையால் சுகாதார சேவைகள் நிறுத்தம்

அரசதாதிய உத்தியோகத்தர்கள் உட்பட பல்வேறு தொழிற்சங்கங்கள் 48 மணிநேர தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமையால் பல்வேறு சுகாதார சேவைகள் ஸ்தம்பிதமடைந்திருந்தன.

மருத்துவசேவைகளுக்குவழங்கப்படும் 35,000 ரூபா கொடுப்பனவை ஏனைய சேவைகளுக்கும் வழங்குமாறு கோரி நாடளாவியரீதியில் அரச தாதிய உத்தியோகத்தர்கள் இணைந்த சுகாதார தொழிற்சங்கங்களால்சுகவீனவிடுமுறைபோராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதற்கு வவுனியாவிலும் ஆதரவு வழங்கப்பட்டுள்ளதுடன் வவுனியா பொது வைத்தியசாலையின் தாதிய உத்தியோகத்தர்கள் புதன்கிழமை பணிக்கு சமுகமளிக்காமையால் வைத்தியசாலையின் சேவைகள் பல ஸ்தம்பிதமடைந்துள்ளன.

குறிப்பாக பெறுமதிசேர் வரி அதிகரிக்கப்பட நிலையில் தமக்கான கொடுப்பனவுகள் அதிகரிக்கபடவில்லை. எனவே, அரசாங்கத்தின் அநீதியான பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தப் பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளதாக போராட்டகாரர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை குறித்த தொழிற்சங்கப் போராட்டத்தில் பொதுச்சுகாதார பரிசோதகர்கள், பற்சிகிச்சை நிபுணர்கள், மருந்து கலவைகள் நிபுணர்கள், ஈ.சி.ஜி. தொழில்நுட்ப நிபுணர்கள், ஈ.ஈ.ஜி. தொழில்நுட்ப நிபுணர்கள், கண் மருத்துவ நிபுணர்கள், பொது சுகாதார ஆய்வக தொழில்நுட்ப நிபுணர்கள் மற்றும் பல் தொழில்நுட்ப வல்லுநர்கள் ஆகியோரை பிரதிநிதித்துவப்படுத்தும் பல தொழிற்சங்கங்கள் இந்த பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(05)



# இலங்கை வருகின்றார் பிரித்தானிய இளவரசி

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தைமேற்கொண்டுபிரித்தானிய இளவரசி ஆன் புதன்கிழமை இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

இந்நிலையில், இளவரசி ஆன், அவருடையகணவர்வைஸ்அட்மிரல் சேர் திமொதி லோரன்ஸ்டன் புதன்கிழமை லண்டனில் இருந்து கொழும்புக்கு தனது பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

அவர்ஸ்ரீலங்கன்ஏர்லைன்ஸ்விமானத்திலே இலங்கை வந்தடைந்தார்.

இது குறித்து ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமான சேவை தனது உத்தியோகப்பூர்வ சமூக வலைத்தளத்தில்,

அரசகுடும்பத்திற்கு ஏற்ற சேவை! இலங்கைக்கும்பிரித்தானியாவுக்கும் இடையிலான 75 வருட இராஜதந்திர உறவுகளைநினைவுகூரும்வகையில் இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயமாக லண்டனில் இருந்து கொழும்புக்கு தனது பயணத்தை மேற்கொண்டுள்ள பிரித்தானிய இளவரசி ஆன்னை வரவேற்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

இளவரசிக்கும் மற்றும் அவரது தூதுக்குழுவினருக்கு இலங்கையின் அரவணைப்பையும் விருந்தோம்பலையும் விரிவுபடுத்துவது உண்மையிலேயே ஒரு கௌரவமாகும். எங்கள் விமான சேவையை பயணத்திற்கு தேர்ந்தெடுத்ததற்கு நன்றி என பதிவிட்டுள்ளது.

(05)

# யாழில் 23 ஏக்கர் காணியை விடுவிக்க ராணுவம் முடிவு

யாழ்ப்பாணத்தில் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள 23 ஏக்கர் காணிகளை விடுவிக்க உள்ளதாக இராணுவத்தினர் யாழ்.மாவட்ட செயலகத்திற்கு அறிவித்துள்ளனர். வலி. வடக்கில்வறுத்தலைவிளான் பகுதியில் உள்ள 23 ஏக்கர் காணிகளையே விடுவிக்க உள்ளதாக இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் வலி. வடக்கில் சுமார் 3 ஆயிரம் ஏக்கர் காணி முப்படைகளின் வசம் உள்ள நிலையில், அவற்றை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்ட நிலையில் 23 ஏக்கர் காணிகளை விடுவிக்க இராணுவத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(05)






## மரக்கறிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரை உயர்ந்துள்ளது .

அதேவேளை பச்சை மிளகாயின் விலை 1700 வரை உயர்ந்திருக்கிறது. கோவா பீன்ஸ் போன்ற மரக்கறிகளின் விலையும் ரூ. 600 ரூபாய் முதல் 700 வரை உயர்ந்திருக்கிறது. கத்திரிக்காயின் விலை நேற்று 800 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.

மொத்தத்தில் மரக்கறிகளின் விலைஉச்சத்தைஅடைந்திருக்கிறது. மக்கள் கஷ்டத்தினா மத்தியில் அவைகளை கொள்வனவு செய்ய வேண்டி இருக்கிறது.

## 90 கிலோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)



கைது செய்யப்பட்டார்.

இராணுவ புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கமைய விசேட அதிரடிப் படையினரால் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

34வயதானஒருவரேஇவ்வாறு கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் மற்றும் கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா என்பன மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

## மருத்துவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதார கொள்கைகளுக்கு எதிர்ப்புதெரிவித்தும்தமக்கும்35,000 கொடுப்பனவை வழங்குமாறு கோரியே இந்த பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்படுவதாக அச்சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

பொது சுகாதார பரிசோதகர்கள், பாடசாலை பற்சிகிச்சை நிபுணர்கள், மருந்து கலவைகள் நிபுணர்கள், ஈ.சி.ஜி தொழில்நுட்ப நிபுணர்கள், நுநுபு தொழில்நுட்ப நிபுணர்கள், கண் மருத்துவ நிபுணர்கள், பொது சுகாதார ஆய்வக தொழில்நுட்ப நிபுணர்கள்மற்றும்பல்தொழில்நுட்ப வல்லுநர்கள் ஆகிய தரப்பினர் மருத்துவசேவைகள்ஒன்றிணைந்த முன்னணியின் பங்காளர்கள்.

இதேவேளை, நாடு முழுவதும் உள்ள பல அரச வைத்தியசாலைகளின் தாதியர்களும் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

## வெள்ளத்தால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒத்திவைப்பு விவாத்தின் மீது உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு புல்மோட்டை முதல் பொதுத்துவில் பானமை வரையில் கிழக்கு மாகாணத்தின் அனைத்துகரையோரப்பகுதிகளிலும் பொதுமக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

குறித்த பகுதிகளில் வெள்ளநீர் வழிந்தோடமுடியாதுதேங்கிநிற்பதால் பொதுமக்கள் இடம்பெயர்ந்து தங்கியிருக்கின்றனர். போக்குவரத்து பிரச்சினைகளும் பூதாகரமாக உருவெடுத்து வருகின்றது.

இடம்பெயர்ந்தவர்களுக்கு சமைத்தஉணவுகளைவழங்குதல் உட்பட பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கானநடவடிக்கைகளை அரச அதிபர்கள் உடனடியாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

இஸ்ரேலியர்களுக்கு ஆதரவாக செங்கடலுக்கு எமது கடற்படையினரை அனுப்புவதற்கு முன்னதாக உள்நாட்டில் இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக கடற்படையினரை உடனடியாக அனுப்ப வேண்டும் என்றார்.




JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஓட்டோ கட்டணங்களால் ஏமாந்துபோயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN
EASILY
REGISTER &
BOOK
YOUR RIDE
Google Play
App Store
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

காலைக்கதிர் Kalaikkathir

# சிறுநீரக விற்பனை மோசடி வைத்தியர்களின் பயணத் தடை நீக்க கோரிக்கை நிராகரிப்பு

சிறுநீரக விற்பனை மோசடி தொடர்பில் தமக்கு விதிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு பயணத்தடையை நீக்குமாறு வைத்தியர்கள் குழுவால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை கொழும்பு மேலதிக நீதிவான் ஹர்ன கெகுணாவல நிராகரித்துள்ளார்.

குறித்த வைத்தியர்கள் சட்டத்தரணிகள் ஊடாக நீதிமன்றில் விடுத்த கோரிக்கையை பரிசீலித்த நீதிவான் அதனை நிராகரித்துள்ளார்; எனத் தெரிவிக்கப் படுகிறது.

கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் வைத்து சிலரின் சிறுநீரகங்கள் அகற்றப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளன என கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் தெரிவித்த நிலையிலேயே இது தொடர்பான வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (05)

# மட்டக்களப்பு தொடருந்து நிலையம் வெள்ளத்தில் சேவைகள் பொலன்னறுவையுடன் மட்டுப்பாடு

மட்டக்களப்பு ரயில் நிலையம் வெள்ளத்தில் மூழ்கியது ; ரயில் சேவை பொலன்னறுவை வரை மட்டுப்படுத்தப்பட்டது.

மட்டக்களப்பு மார்க்கத்தில் செல்லும் ரயில் சேவை பொலன்னறுவை வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

பலத்த மழை காரணமாக ரயில் பாதையில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் அந்தப் பாதை ஊடான ரயில்களை இயக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக மட்டக் களப்புக்கான இரவு தபால் ரயில் சேவையும் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (05)

# மட்டக்களப்பில் வெள்ளத்தில் மூழ்கும் மரக்கறிச் செய்கை

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது தொடர்ச்சியாகப் பெய்துவரும் பலத்த அடை மழை காரணமாக மேட்டுநிலப் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

வீடுகளில் வெள்ள நீர் உட்புகுந்துள்ளதால் மக்கள் இடம்பெயர்ந்து உறவினர்களின் வீடுகளில் வசித்து வருகின்றனர்.

இந்நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தின் களுதாவளை, தேத்தாதீவு, மாங்காடு, செட்டிபாளையம், குருக்கள்மடம், களுவாஞ்சிகுடி உள்ளிட்ட பல கிராமங்களில் பயிரிடப்பட்ட மிளகாய், கத்தரி, மரவள்ளி, வெங்காயம், தக்காளி உள்ளிட்ட மேட்டுநிலப் பயிர்களும், தோட்டங்களும், வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதனால் அப்பகுதி விவசாயிகள் பெரும்நட்டத்தைஎதிர்நோக்கியுள்ளனர் எனவும், மிகுந்த இன்னல்களை எதிர் கொள்ள நேரிட்டுள்ளதாகவும் கவலை தெரிவிக்கின்றனர். மரக்கறித் தோட்டங்களில் இவ்வாறு வெள்ளநீர் தேங்கியுள்ளதால் வழிந்தோடுவதற்கு முடியாத இந்நிலையில் அப்பகுதி விவசாயிகள் ஒன்றிணைந்து நீரை வெளியேற்றுவதற்கானமுயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். (05)



# ஐக்கிய தேசியக் கட்சியின் இவ்வருடத்துக்கான பொதுச் செயலாளராக பாலித ரங்கே பண்டார

ஐக்கிய தேசியக் கட்சியின் இவ்வருடத்துக்கான பொதுச் செயலாளராக பாலித ரங்கே பண்டார நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றகட்சி செயற்குழுக்கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டு செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கானநியமனக்கடிதம்கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவின் பிரதம நிறைவேற்று அதிகாரி மல் செனரத்வால்பாலித்தரங்கபண்டாரவிடம் வழங்கப்பட்டது. (05)

# சந்தேகத்தில் கைதானவர் கல்கிஸை பொலிஸ் நிலையத்தில் உயிரிழப்பு

கல்கிஸை பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பொலிஸ் கூண்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த சம்பவம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது. இவ்வாறு உயிரிழந்தவர் கொழும்பு 5 பிரதேசத்தைச் சேர்ந்த 58 வயதுடையவராவார்.

இவர் செவ்வாய்க்கிழமை கல்கிஸை பீரிஸ் வீதியில் பஸ் நிலையத்திற்கு அருகில் நின்றுகொண்டிருந்த நிலையில் அங்கு வந்த பொலிஸார் அவரை விசாரித்த போது சந்தேக நபர் உரிய பதிலளிக்காததால் பொலிஸார் இவரைக் கைது செய்துள்ளனர்.

இதனையடுத்து சந்தேக நபர் தனது காற்சட்டையில் அணிந்திருந்த பெல்ட்டை பயன்படுத்தி பொலிஸ் கூண்டில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கிஸை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# தென்கிழக்கு பல்கலைக்கழக அனைத்து கல்வி நடவடிக்கைகளும் இடைநிறுத்தம்

சீரற்ற காலநிலை மற்றும் வெள்ள அபாயம் காரணமாக நேற்று (புதன்கிழமை) முதல் தென்கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தின் அனைத்து கல்வி நடவடிக்கைகளும் 2024 ஜனவரி 16 ஆம் திகதி வரை இடைநிறுத்தப்பட்டுள்ளன என உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய காலநிலை முன்னறிவிப்புகளால் ஏற்படக்கூடிய சாத்தியமான ஆபத்துகளைக் கவனமாக ஆராய்ந்த பிறகு பல்கலைக்கழகத்தின் மூத்த ஆலோசனைக் குழு இந்த முடிவை எடுத்துள்ளது.

அதேவேளைசம்மாந்துறைவளாகத்தின்பிரயோக விஞ்ஞான பீட கல்வி நடவடிக்கைகள் வழமை போன்று செயற்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வெள்ள அனர்த்தம் தொடர்பில் விடுதியில் தங்கியுள்ள மாணவர்கள் அனைவரும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளதோடு, பல்கலைகழக தாழ்நில பிரதேசத்தில் காணப்படுகின்ற அசையும் சொத்துக்களை பாதுகாக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உபவேந்தர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளைசேனநாயக்கநீர்மட்டம்108.50அடி ஃ110 அடி நிறைந்துள்ளதாகவும் இதனை அடுத்து 5 வான்கதவு திறக்கப்பட்டு 5.5 அடி நீர் தற்போது வெளியேற்றப்பட்டுள்ளதுடன் வெளியாகும் நீர் பாய்ச்சலின் அளவு கடுமையாக அதிகரித்துள்ளது என அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சி. முகம்மட் றியாஸ் தெரிவித்தார்.

எனவே மக்கள் கடும் அவதானத்துடன் இருக்குமாறும் நீர்மட்டம் இன்னும் அதிகரிக்கக் கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (05)

# தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களில் 173 பேர் பாடசாலைகளின் மாணவர்கள்

தொழுநோயாளர்களின் எண்ணிக்கையில் கடந்த ஆண்டு அதிகரிப்பு பதிவாகியுள்ளதாகவும் இந்நோயால் பாதிக்கப்பட்ட 1,550 பேரில் 173 பேர் பாடசாலை மாணவர்கள் அடங்குகின்றனர் எனவும் தொழுநோய் எதிர்ப்பு இயக்கம் தெரிவித்துள்ளது.

மேலும், 315 நோயாளர்கள் கொழும்பு மாவட்டத்திலிருந்தும் இரண்டாவது மற்றும் மூன்றாவது அதிக நோயாளர்கள் கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களிலிருந்தும் பதிவாகியுள்ளனர்.

இதேவேளை, பாடசாலை மாணவர்களிடையே அதிகரித்து வரும் இந்த நோயைக் கருத்தில் கொண்டு, தொழுநோய் தொற்றுகளைக் கண்டறிவதற்கான தேசிய அளவிலான திட்டம் பாடசாலை மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. (05)

# வழங்கிய கடனால் பொருளாதார சீர்திருத்தங்களா? ஆய்வுசெய்ய வருகிறது சர்வதேச நாணயநிதிய குழு

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று புதன்கிழமை இரவு இலங்கைக்கு விஜயம் செய்துள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

அவர்கள் இன்று (வியாழக்கிழமை) முதல் 17 ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருப்பார்கள் என அமைச்சு தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளின் விஜயத்தின் பிரதான நோக்கம் இலங்கையின் பொருளாதாரத்தின் அண்மைக்கால போக்குகளை ஆராய்வதாகும்.

மேலும், நிதியத்திலிருந்து கடன்வசதியைப் பெற்றபின்னர், இந்த நாட்டின் பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகள் குறித்த ஆய்வு அதே குழுவால் மேற்கொள்ளப்படும் என நிதியமைச்சு தெரிவித்துள்ளது. (05)

## 2023...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

2022ஆம் ஆண்டில் ஜனாதிபதி நிதி அமைச்சராகப் பொறுப்பேற்கும் போது 360 மில்லியன் ரூபா நிதிப்பட்டியலாக செலுத்துவதற்கு நிலுவையாகக் காணப்பட்டது. அப்பட்டியல் உட்பட 2023.12.15ஆம் திகதி வரையான வரையறுக்கப்பட்ட ஒதுக்கீட்டின் கீழ் முன்வைக்கப்பட்ட சகலபட்டியல்களையும் முழுமையாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கு மேலதிகமாக ஓய்வு பெற்றவர்களுக்காக செலுத்தப்படும் நன்கொடைக்காக 2023ஆம் ஆண்டு ஆரம்பமாகும் போது காணப்பட்ட 15 மாத நிலுவைத்தொகை, 2023ஆம் ஆண்டு டிசெம்பர் 15 வரையான மொத்த நன்கொடையை பூர்த்தி செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்காக 48 பில்லியன் ரூபா வரையான நிதி விலக்கழிக்கப்பட்டுள்ளது. மேலும், சமுர்த்தி, விசேட தேவையுடைய, முதியோர்களுக்காக மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்காக வழங்கப்படும் நிதியுதவிகளுக்காக 2023 இலை 184 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது என்றார்.

## மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

20 குடும்பங்களை சேர்ந்த 70 நபர்கள் பாலையடிதோனா சிறி முருகன் வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

காத்தான்குடி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பகுதியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 11 குடும்பங்களை சேர்ந்த 20பேர் காத்தான்குடி பதுரியா பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட ஏறாவூர் 4ஆம் குறிச்சி, எல்லை நகர், ஐயங்கேணி, ஆறுமுகத்தான் குடியிருப்பு, சவுக்கடி போன்ற பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட ஏறாவூர் 4ஆம் குறிச்சியை சேர்ந்த 42 குடும்பங்களை சேர்ந்த 54 பேர் ஏறாவூர் காட்டு மாஞ்சோலை மணி மண்டபத்தில் தங்க வைக் கப்பட்டுள்ளர்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள 20 செயலகப் பிரிவுகளில் 11 செயலகப் பிரிவுகள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன. மாவட்டத்தில் 7,997 குடும்பங்களை சேர்ந்த 23,849 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் காணப்படும் 11 பிரதேச செயலாளர் பிரிவின் 6 பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மக்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை - கிண்ணியா பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மயிலத்தன்சேனை பிரதேசத்திற்கான தரை வழி போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளது.

அதேநேரம், மட்டக்களப்பு வீதியின் மனம்பிட்டி கல்லேல்லவுக்கு இடையிலான பகுதியும் மறுஅறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது.

இதேவேளை, அம்பாறை - இங்கினியாகல சேனாநாயக்க சமுத்திரத்தின் நீர் கொள்ளளவு அதிகரித்துள்ளதால் கல் ஓயா கீழ் பிரிவிலுள்ள மக்களுக்கு வெள்ளம் தொடர்பான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சேனாநாயக்க சமுத்திரம் அதிகபட்ச நீர் கொள்ளளவை எட்டியுள்ளதோடு கல் ஓயா பொல்வத்த, இறக்காமம், அக்கரைப்பற்று போன்ற தாழ்நிலப் பிரதேசங்களிலுள்ள மக்கள் வெள்ளம் தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடும் மழை காரணமாக மொரகஹகந்த நீர்த்தேக்கத்தின் வான்கதவு ஒன்று காலை திறக்கப்பட்டுள்ளது. லுணுகம்வெஹர நீர்த்தேக்கத்தின் 4 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, மண்மேடு சரிந்து வீழ்ந்தமையினால் பதுளை - கொழும்பு பிரதான வீதியில் ஹாலிஎல உடுவர 07 ஆம் மைல்கல் பகுதி தொடர்ந்தும் மூடப்பட்டுள்ளது. பண்டாரவளை - பதுளை பிரதான வீதியின் உடுஹீல்பொத்த பகுதியில் மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளது.

## வடக்கு ...

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

பூரணப்படுத்தப்படுமா என்ற கேள்வி எழுகின்றது.

அதனைப் போலவே காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக யுத்தம் முடிந்த காலத்திலிருந்து இன்றுவரை அந்த மக்கள் போராடி வருகின்றபோதிலும்கூட அவர்களை சந்தித்துப் பேசுவதற்கோ அல்லது அவர்களுக்கு நம்பிக்கை அளிக்கும் விதத்திலோ எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன், ஜனாதிபதியை சந்திக்க முயற்சித்த தாய்மார்களைக் கைது செய்து சிறையில் அடைத்தது என்பது மிக மோசமான செயற்பாடாகாகும்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் நீண்ட போராட்டத்திற்கு மதிப்பளிக்காதது மட்டுமல்ல அவர்களது உறவினர்களின் இருப்பு தொடர்பில் அவர்கள் அறிந்துகொள்வதற்கான நீதியும் தொடர்ந்து மறுக்கப்பட்டு வருகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களின் இத்தகைய வார்த்தை ஜாலங்கள் தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கான ஒரு முயற்சியாகத் தென்படுகிறதே தவிர, ஜனாதிபதியின்மீதோ அவரது தலைமையின் மீதான அரசின்மீதோ நம்பிக்கை கொள்வதற்கு இடமளிக்கவில்லை. அரசாங்கத்தின் இவ்வாறான தொடர் நடவடிக்கைகள்தான் தமிழ் மக்கள் ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான சூழ்நிலையை நிர்ப்பந்தித்துள்ளது - என்றுள்ளார்.


யாழில்
முதல் முறையாக
சிறு கைத்தொழில் முயற்சியாளர்களின்
கொண்டாட்டம்
Tourism
Northern Province
இணைந்து வழங்குவோர்
Visit North
Experience the Hospitality
NCI
CHAMBER OF COMMERCE AND INDUSTRIES OF YARLPANAM
CCIY
UNITY IS STRENGHT
happymarket.lk
அல்லங்காடி
கொண்டாட்டம்
அனுசரணையாளர்
synamon global
JANASHAKTHI Life
Orient Finance
ஒவ்வொரு
சனிக்கிழமைகளிலும்
04:00PM - 10:00PM
யாழ் கோட்டை
(பண்ணை சுற்றுவட்டம்)
NGO Partner
Sustainability Partner
World Vision
SMILEzone
CCH
IDEA FACTORY
THE SOCIAL INNOVATIONS LAB
ஊடக அனுசரணை
ஒழுங்கமைப்பாளர்
காலைக்கதிர் Kalaikkathir
BirdFather
More Social More Business
happymarket.lk
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

# 3400 ஆண்டு பழைமையான நாக மனித எச்சங்கள் வேலணையில் கண்டுபிடிப்பு










3400 ஆண்டு பழமையான நாக மனித எச்சங்கள் வேலணையில் கண்டுபிடிக்கப்பட்டுற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. யாழ். குடா நாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட தொன்மையான வரலாற்றுக்கு முற்பட்ட மனித எச்சங்களில் இதுவும் ஒன்றாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இத் தரவுகளைக் கொண்ட தொல்லியல் மையம் வேலணை தீவின் சுற்றுலாத் தளமான கடற்கரையிலிருந்து ஒரு கிலோ மீற்றர் தெற்கே அமைந்துள்ளதாகத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த ஆய்வுத் தொடர்ச்சி 2009 ஆம் ஆண்டு முதல் இலங்கையின் கரையோர வளங்களின் வரலாற்றுப் பயன்பாடு மற்றும் குறிப்பாக கடல் ஓடுகள் தொடர்பான பயன்பாட்டுப் போக்குகள் குறித்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ் அகழ்வாய்வில் வேட்டையாடி உண வாக உட்கொள்ளப்பட்ட விலங்குகளின் எச்சங் கள், கருவிகள் மற்றும் இறந்த உடல்கள் புதைக்கப் பட்டதற்கான சான்றுகள் மற்றும் ஏராளமான தொல்பொருள்கள் காணப்படுகின்றன. இத்தகைய எச்சங்கள் இலங்கையில் தெற்கு கடற்கரையிலும் கண்டறியப்பட்டுள்ளன. இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திற் குரிய மிக அண்மித்த சான்று மாந்தையில் கி.மு.1600 இற்கு முற்பட்டவை கிடைக்கப்பெற்றிருந்தது. தற்போது நடைபெற்று முடிந்த இவ் அகழ்வாராய்ச்சியில் இருந்து கிடைத்த தொல்பொருள் சான்றுகளின் காலப் பகுப்பாய்வை அடிப்படையாகக் கொண்டு, இலங்கையின் வரலாற்றுக்கு முந்திய காலகட்டத்தை இன்னும் இருநூறுஆண்டுகளுக்குமுன்நோக்கிநகர்த்தியுள்ளது.

இவ்வகழ்வாய்வை இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் தொல்பொருள் மற்றும் பாரம்பரிய முகாமைத்துவத் துறையின் மூத்த விரிவுரையாளர் திலங்க சிறிவர்தனவுடன் இணைந்து இந்திகா ஜெயசேகர, ஜனினா நோனிஸ் அத்துடன் தொல்லியல் மற்றும் பாரம்பரிய கற்கைகள் நிறுவகத்தின் நதீரா திஸாநாயக்க மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் தொல்லியல் துறை மாணவர்களான டக்சினி, கனுஸ்டன், சுசாந்தி ஆகியோர் இவ் ஆராய்ச்சியை மேற்கொண்டனர். (05)

# இலங்கை இன வன்முறையால் பொருளாதாரத்தில் பின்னடைவு

## நீதியமைச்சர் விஜயதாஸ தெரிவிப்பு

நாட்டில் தேசிய நல்லிணக்கத்தை ஸ்தாபிப்பதில் பௌத்த பிக்குகள் தடையாக உள்ளார்கள் என்ற தவறான நிலைப்பாடு சர்வதேசத்தின் மத்தியில் காணப்படுகிறது. அனைத்தையும் எதிர்க்கும் ஒரு சில 'வொயிஸ் கட்' பிக்குகளால் இந்த நிலை காணப்படுகிறது. தேசிய நல்லிணக்கத்தை அலுவலகத்தை ஸ்தாபித்து தவறுகளை திருத்திக் கொள்ளுமாறு மகாநாயக்க தேரர்கள் ஆலோசனை வழங்கியுள்ளார்கள் என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

இன வன்முறையால் இலங்கை பொருளாதார ரீதியில் பின்னடைந்துள்ளது. இலங்கையில் இரண்டாம் தர பிரஜைகள் என்று எவருமில்லை என்பதை உறுதிப்படுத்துவது தேசிய ஒற்றுமைக்கும், நல்லிணக்கத்துக்குமான அலுவலகச் சட்டமூலத்தில் நோக்கமாகும் எனவும் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வின் போது தேசிய ஒற்றுமைக்கும், நல்லிணத்துக்குமான அலுவலக சட்டமூலம், தேசிய நீரளவை சட்டமூலம் என்பனவற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் என்பது முக்கியமானது. இது இன்று நேற்று ஆரம்பமான பேசுபொருளல்ல, முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவின் ஆட்சியில் யுத்த சூழலின் போது இந்த அலுவலகத்தை ஸ்தாபிப்பதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

அப்போது நிர்வாக மட்டத்தில் மாத்திரம் அந்தஸ்த்து வழங்கப்பட்டது.

தற்போது அரசமைப் பின் ஊடாக அங்கீகாரம் வழங்க உரிய நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பொருளாதாரப் பாதிப்பால் ஒட்டுமொத்த மக்களும் தற்போது நெருக்கடிக்குள்ளாகியுள்ளார்கள். பல ஆண்டுகாலமா கக் கடைப்பிடித்த தவறான பொருளாதாரக் கொள்கை, இனவாத முரண்பாடுகள் உள்ளிட்ட காரணிகளால் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டது. அரச கட்டமைப்புக்களும் வீழ்ச்சியடைந்தன.

சமூகக் கட்டமைப்பில் ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை ஸ்தாபிப்பதுடன் நாடாளுமன்றத்திலும் ஒற்றுமை,நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த வேண்டும். ஒருசிலரது முறையற்ற செயற்பாடுகளால் 225 உறுப்பினர்களையும் மக்கள் வெறுக்கிறார்கள். இந்நிலைமை மாற்றமடைய வேண்டும்.

ஒரு காலத்தில் கிராமப்புறங்களில் இன நல்லிணக்கம் சிறந்த முறையில் இருந்தது. ஆனால் தற்போது கிராம புறங்கள் இனம், மதம் மற்றும் அரசியல் ரீதியில் பிளவுபட்டுள்ளது.

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் தேசிய நல்லிணக்கத்தை ஸ்தாபிப்பது குறித்து புலம்பெயர் தமிழ் அமைப்புகள் அண்மையில் ஜனாதிபதி உட்பட மத தலைவர்களுடன் பேச்சில் ஈடுபட்டார்கள். ஒரு தரப்பினர் இதற்கு சாதகமாகப் பேசியுள்ள நிலையில் பிறிதொரு தரப்பினர் விமர்சனங்களை முன்வைத்துள்ளார்கள். தேசிய நல்லிணக்கத்துக்கு பௌத்த பிக்குகள் எதிராக உள்ளார்கள் என்ற தவறான நிலைப்பாடு சர்வதேசத்தின் மத்தியில் காணப்படுகிறது. அனைத்தையும் எதிர்க்கும் ஒருசில 'வொயிஸ் கட்' பிக்குகளால் ஒட்டுமொத்த பிக்குகளும் தவறான கண்ணோட்டத்தில் பார்க்கப்படுகிறார்கள்.

ஆகவே தேசிய நல்லிணக்கத்தை மேம்படுத்த விசேட கவனம் செலுத்தி தவறுகளைத் திருத்திக் கொள்ளுமாறு மகாநாயக்க தேரர்கள் ஆலோசனை வழங்கியுள்ளார்கள். சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தினர் இனவாதத்தை விரும்பவில்லை. அமைதியாக வாழும் சூழலுடன் இலங்கையர் என்ற அடிப்படையில் வாழ விரும்புகிறார்கள். ஒருசில அரசியல்வாதிகள் இனவாதத்தை ஒக்சிசன் போல் பயன்படுத்துகிறார்கள். இனவாதத்தை தூண்டிவிட்டு அதனூடாக அரசியல் செய்கிறார்கள். இனத்தை முன்னிலைப்படுத்தி தமிழ்,முஸ்லிம் மற்றும் சிங்களம் என்ற அடிப்படையில் அரசியல் கட்சிகளை பதிவு செய்யும் நிலைமை மாற்றம் பெற வேண்டும். பொது கொள்கைகளை முன்னிலைப்படுத்தும் வகையில் அரசியல் கட்சிகள் பதிவு செய்யப்பட வேண்டும். உத்தேச தேசிய ஒற்றுமைக்கும்,நல்லிணக்கத்துக்குமான அலுவலக சட்டமூலம் ஊடாக கிராம சேவகர் பிரிவுகளுக்கு விசேட கடமைகள் பொறுப்பாக்கப்படும்.

நாடளாவிய ரீதியில் உள்ள கிராம சேவகர் பிரிவுகள் ஊடாக விசேட செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படும். எதிர்வரும் வாரமளவில் யாழ்ப்பாண மாவட்டத்தில் விசேட திட்ட பணிகளை முன்னெடுக்கவுள்ளோம். இலங்கையில் எவரும் இரண்டாம் தர பிரஜைகள் அல்லர். அனைவரும் இலங்கையர்கள் என்பதை உறுதிப்படுத்துவது இந்த சட்டமூலத்தில் பிரதான எதிர்பார்ப்பாகும். - என்றார். (05)

# பெண்ணொருவரை கொலை செய்த நபர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது

பெண்ணொருவரை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொன்றதாக சந்தேகிக்கப்படும் 45 வயதுடைய சந்தேக நபர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த கொலைச் சம்பவம் செவ்வாய்க்கிழமை தெற்கு அதிவேக வீதியின் கஹதுடுவ பகுதியில் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பிலியந்தலை பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் ஊழியராகக் கடமையாற்றிய பெண் ஒருவரே இவ்வாறு கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளார். உயிரிழந்த பெண், வேலை முடிந்து வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த போது, கொல்லப்பட்டார் எனவும் இந்த பெண்ணை கொன்ற சந்தேக நபர் நாட்டை விட்டு வெளியேற முயற்சித்த போது கைது செய்யப்பட்டார்; எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். பல வருடங்களாக வெளிநாட்டில் வசித்த சந்தேக நபர் இலங்கைக்கு வந்துள்ள நிலையிலேயே சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# கைதாகி விடுதலையான பிரபல மத தலைவரின் நிகழ்வில் பங்கேற்ற சிறை அதிகாரிக்குச் சிக்கல்

மதங்களுக்கு அவமரியாதை தரும் வகையில் கருத்துக்களை பகிர்ந்து கொண்டதாக குற்றம்சாட்டப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்ட மத தலைவர் ஒருவர் கொழும்பில் நடத்திய நிகழ்வொன்றில் கலந்து கொண்ட சிறைச்சாலை அதிகாரியிடம் நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ விசாரணை நடத்தியுள்ளார்.

இந்த சம்பவம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

குறித்த சிறைச்சாலை அதிகாரி இந்த நிகழ்வில் கலந்து கொண்டமை தொடர்பில் நீதி அமைச்சருக்கு தகவல் கிடைத்துள்ளது. இந்நிலையில் இந்த சம்பவம் தொடர்பில் அவர் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகமாக துார உபுல்தெனியவிடம் முறைப்பாடு வழங்கியுள்ளார்.

இதனையடுத்து குறித்த சிறைச்சாலை அதிகாரியிடம் துார உபுல்தெனிய விசாரணை நடத்தியுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது. (05)

# யால தேசிய பூங்காவில் வெள்ளம் பிரதான நுழைவாயிலுக்குப் பூட்டு

தொடர் மழை காரணமாக சிறிய குளங்கள் நிரம்பி வழிவதால் யால பகுதியில் பலதுபன பிரதான நுழைவாயில் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

இதன் காரணமாக சுற்றுலா பயணிகளுடன் இரண்டு வாகனங்கள் வெள்ளத்தில் சிக்கியுள்ளன.

இந்நிலையில், யால தேசிய பூங்காவிற்கு செல்வதற்கான பிரதான நுழைவாயில் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது.

எனினும், கடகமுவ நுழைவாயிலில் இருந்து சுற்றுலா பயணிகள் யால பூங்காவிற்குள் பிரவேசிக்க முடியும் என அவர் மேலும் குறிப்பிட்டுள் ளார் . (05)

# காணாமல்போனோர் குறித்த விசாரணைகளை 2025ஆம் ஆண்டுக்குள் நிறைவுசெய்யத் திட்டம்

## வேலுகுமார் எம்.பிக்கு அமைச்சர் விஜேதாஸ பதில்

காணாமல்போனோர்கள் தொடர்பான முறைப்பாடுகளை 2025 ஆம் ஆண்டுக்குள் நிறைவுசெய்ய திட்டம் என வேலுகுமார் எம்.பிக்கு அமைச்சர் விஜேதாஸ பதில் அளித்துள்ளார்.



நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் சட்டமூலம் மீதான விவாதத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்த விடயம் ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

வேலுகுமார் எம்.பி. உரையாற்றுகையில் -

கடந்த காலத்தில் காணாமல் போனவர்கள் தொடர்பாக ஆராய அமைக்கப்பட்ட அலுவலகம் தற்போது காணாமல் போயுள்ளது. காணாமல் போனவர்களின் உறவினர்கள் 2 ஆயிரம் தினங்களுக்கும் அதிகமான நாள்களாக வீதியில் இருக்கின்றனர்.

அது தொடர்பில் தீர்வொன்றை அவர்கள் கேட்டுவருகின்றனர். ஆனால் நான் அறிந்தமட்டில் காணாமல் போனோர் தொடர்பாக ஆராய அமைக்கப்பட்ட அலுவலகம் தற்போது காணாமல் போயுள்ளதால அந்த மக்களுக்கு இதுவரை எந்தத் தீர்வும் இல்லாமல் இருக்கிறது. - என்றார்.

அதற்கு அமைச்சர் தொடர்ந்து பதிலளிக்கையில் -

காணாமல்போனவர்கள் தொடர்பாக ஆராய்ந்து பார்க்க அமைக்கப்பட்ட அலுவலகம் கடந்த காலங்களில் செயற்பட்டு வந்திருக்கிறது. கடந்த 2022ஆம் ஆண்டு நாங்கள் ஆட்சிக்கு அதனை செயற்படுத்தியபோது அதற்கு 14ஆயிரத்து 998 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதில் 62 முறைப்பாடுகள் தொடர்பான விசாரணை நடவடிக்கை நிறைவடைந்திருக்கிறது.

அத்துடன் கடந்த 18 மாத காலப்பகுதியில் அந்த அலுவலகத்துக்கு புதிய உறுப்பினர்கள் நியமித்து விசாரணை நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டோம்.

அதன் பிரகாரம் 5200 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கைகளை நாங்கள் முடித்திருக்கிறோம். அதன் பிரகாரம் 2025 முடிவடையும்போது காணாமல் போனோர்கள் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டிருக்கும் 14998 முறைப்பாடுகளையும் விசாரணை செய்து முடிக்க நாங்கள் திட்டமிட்டிருக்கிறோம். - என்றார். (05)

# மகாவலி கங்கையின் நீர்மட்டம் அதிகரித்ததால் மூடப்பட்ட வீதி

*பொலன்னறுவை - மட்டக்களப்பு பிரதான மார்க்கத்தின் மனம்பிட்டிய - கல்லெல்ல வீதி மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.*

*மகாவலி கங்கையின் நீர்மட்டம் அதிகரித்தமையால் குறித்த வீதி மூடப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (05)*

THE LARGEST MULTITRADE EXHIBITION IN THE NORTH

14th EDITION

# Jaffna International Trade Fair
# யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை

JITF 2024

JANUARY ஜனவரி

19 20 21

10.00 மு.ப - 8.00 பி.ப

Muttraweli Grounds
(Next to Jaffna Fort)

முற்றவெளி மைதானம்
(யாழ் கோட்டைக்கு அருகில்)




Automobile | Construction | Consumer Goods | Apparel
Hospitality | Agriculture | Travel & Tourism | IT | Education
Beverage, Packaging Industry and many more...

PLATINUM SPONSOR — DIMO THE PERFECT PARTNER

GOLD SPONSORS — ADRIAN SOLAR GREEN, NIPPON CEMENT

MEDIA SPONSORS — PRINT, RADIO, TELEVISION (Capital), DIGITAL (காலைக்கதிர்)

ORGANIZED BY — LECS LANKA EXHIBITION

IN ASSOCIATION WITH — CCIY

SILVER SPONSORS — Anchor, SOORYA, Hayleys Solar, 4ever, Darley Butler, Elephant House, KEELLS KREST, PHOENIX, RHINO, Sera

IMALKA : +94 77 1093792 | imalka@saexhibitions.com www.jitf.lk jitf.lk


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.01.2024இல் வெளியிடப்பெற்றது.